ஆகஸ்ட் 2007 August | இதழ் 199 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION









Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

a monthly information digest

17 வது ஆண்டில் th Year

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## ஆசிரியரிடமிருந்து — From the Editor

கோடை பிறந்ததுதான் பிறந்தது, கனடியத் தமிழர்கள் ஆலாய்ப் பறந்து ஓடிக் கொண்டிருக்கின்றனர். வெள்ளி, சனி. ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்கள், முழுமையான வேலை நாட்களிலும் பார்க்கக் கூடிய வேலையுள்ள நாட்களாகக் கணக்கிட முடியாத சமூக நிகழ்வுகள். மண்டபங்கள், வெளியரங்குகள், பூங்காக்கள் அனைத்தும் இந்த மூன்று மாதங்களுக்கு - செப்டம்பர் முதல் வாரத்தில் வரும் தொழிலாளர் தினம்வரை தமிழர் வசமாகியுள்ளன. எல்லாமே கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன. சும்மா சொல்லக்கூடாது, தமிழரின் ஒற்றுமை, கலாசார பண்பாட்டு வளர்ச்சி, விளையாட்டுத் திறன், நிகழ்வுகளின் ஒழுங்கமைப்பு பற்றிக் கனடிய மையச் சமூகத்தினர் நிரம்பவே பேசுகின்றனர். ஆலயங்கள் அனைத்திலும் நைமித்திய திருவிழாக்களும் அலங்கார உற்சவங்களும். தண்டிகை சப்பரம் தேருக்கு நிகராகக் காவடிகள் பாற்குடங்கள் கற்பூரச் சட்டிகள் என்று எங்கும் பக்தி மயம். ஒட்டாவா தலைநகரில் ஈழத்தமிழரின் முன்னெடுப்பில் புதிய வைத்தீஸ்வரர் (சிவன்) கோவில் குடமுழுக்கு நடைபெற்றது. ரிவிஐ தொலைக்காட்சியில்தான் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. பரவசமாக இருந்தது. இம்முறை வல்மொறின் ஆலய வருடாந்த உற்சவத்துக்கு பக்தர்கள் தொகை முன்னர் போல இல்லையென்று அங்கு சென்று வந்தவர்கள் சொல்கின்றனர். காரணம் என்ன? வருடாந்த ரதோற்சவத்தின் போது பல லட்சம் டாலர் சேருகின்றது. ஆனால், ஆலயத்தில் எந்தவொரு புதிய கட்டிட வேலையோ, நிர்மாணமோ இல்லை. அப்படியானால் பணம் எங்கே போகின்றது என்று அடியார்கள் கேட்கின்றனர். கேள்வியும் நியாயமாகத்தான் இருக்கின்றது. மொன்றியலில் கடந்த மாத வார இறுதியொன்றில் ஒரே நாளில் இரு விழாக்கள் நடைபெற்றன. இரண்டும் அங்கிருக்கும் இரு ஊடகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டவை. ஒன்று தமிழ் வானொலிச் சேவை, அடுத்தது, வாராந்த தமிழ்ப் பத்திரிகை. இரண்டும் ஒரே நாளானதால், நெருக்கடிக்குள்ளானது அப்பாவிப் பொதுமக்கள். மொன்றியலில் இருப்பதே இரு தமிழ் ஊடகங்கள்தான். அவைகளே இப்படி 'மோதிக்' கொண்டால், மக்களை ஒற்றுமைப்படுத்துவது யார்? இரண்டுக்கும் செல்ல வேண்டுமென்ற விருப்பம் தொண்ணூறு வீதமானவர்களுக்கு இருந்தும், நடைமுறையில் இது சாத்தியப்படவில்லை. அடுத்த வருடமாவது இந்நிலையை இவர்கள் தவிர்த்தாக வேண்டும் - வாசக நேய அன்பர்களுக்காக. ரொறன்ரோ நகரில் யூன் யூலை மாதங்களில் இடம்பெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகள் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். யூன் 11ல் ஸ்காபரோ நகரசபை வெளியரங்கில் 'வெல்க தமிழ்' நிகழ்வும், யூலை 25ல் மார்க்கம் நகர வெளியரங்கில் "சாவிலும் வாழ்வோம்" நிகழ்வும் (கறுப்பு யூலை) இடம்பெற்றன. இவையிரண்டுமே குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழின விடியலுக்கான புகலிடத் தமிழரின் உணர்வு நிகழ்வுகள். இங்குள்ள தமிழர் அமைப்புகள், சங்கங்கள், மன்றங்கள், கலைக் கழகங்கள், விளையாட்டு அமைப்புகள், மாணவர் சங்கங்கள், இளையோர் முதியோர் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்நிகழ்வுகளை வெற்றியாக்கின. இறுதியாக நடைபெற்ற 'சாவிலும் வாழ்வோம்' ஒரு வரலாற்றுப் பதிவாகியுள்ளது. தமிழர்கள் அதிகம் வாழத் தொடங்கியுள்ள மார்க்கத்தின் நகராட்சி முன்றலில் இடம்பெற்ற முதலாவது நிகழ்வு இது. இந்த இடத்தினை ஏற்பாடு செய்து தந்தவர் அந்த நகரசபையின் உறுப்பினரான லோகன் கணபதி. கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, கனடிய அரசியலில் அரங்கேற்றம் கண்ட முதலாவது ஈழத்தமிழர் என்ற பெருமை இவருக்குண்டு. தமிழர்கள் கனடிய அரசியலில் தீவிரமாக இறங்க வேண்டும் என்ற வேண்டுகோள் எந்தளவுக்கு முக்கியமரனது என்பற்கு இந்த வருட 'சாவிலும் வாழ்வோம்' இடத்தெரிவு நல்லதொரு சான்று. சலுகைகளுக்காகக் கையேந்துவதை விட்டு உரிமையை வென்றெடுக்கக் கனடிய அரசியலில் நாம் ஊன்றிப் பாதம் பதிக்க வேண்டும். இதனை மறந்துவிடக் கூடாது. கடந்த மாதக் கனடியத் தமிழர் நிகழ்வுகளில் முக்கியமான இன்னொன்று, கனடியத் தமிழ் வானொலி (CTR) மூன்றாவதாண்டாக நடத்திய நட்சத்திரத் திருவிழா. மார்க்கம் பெ(F)யர் அரங்கு இரண்டு நாட்கள் விழாக்கோலம் பூண்டிருந்தது. சிகரம் இல்லாத குறை மட்டுமே. இதுவரை இந்த அரங்கத்தில் இத்தனை ஆயிரம் மக்கள் ஒன்றிணைந்தது கிடையாது என்று அந்நகர முதல்வர் மனந்திறந்து கூறுமளவுக்கு விழா ஓகோவென்று வெற்றிமுரசு கொட்டியது. இங்கு என்ன நடைபெற்றது என்று கேட்பதைவிட, இங்கு என்ன இருக்கவில்லை என்று கேட்டால் பதில் 'ஒன்றுமில்லை' என்று சுலபமாக வரும். இனிவரும் காலங்களில் இதனை 'நட்சத்திரப் பெருவிழா' என்று அழைப்பது சாலப்பொருத்தம்.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலகுவாக்கப்படும் கடவுச் சீட்டு புதுப்பிக்கும் நடைமுறை

இலகுவான முறையில் கடவுச் சீட்டினை புதுப்பிக்கும் முறை ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இம்முறையானது குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட கனடிய பிரஜைகள் குறைந்த வினாக்களைக் கொண்ட விண்ணப்பப் படிவத்தினைப் பாவித்து, பிரஜாவுரிமை நிரூபண ஆவணங்களைச் சமர்ப்பிக்காமலும், மற்றைய அடையாள ஆவணங்களைச் சமர்ப்பிக்காமலும், உத்தரவாதமளிப்பவரின் உறுதிமொழி இல்லாமலும் கடவுச் சீட்டை புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவம், பழைய கடவுச் சீட்டு, புதிய இரண்டு புகைப்படங்கள், விண்ணப்ப கட்டணம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்க முடியும்.

பின்வரும் தகைமைகளையுடையோர் இம்முறை மூலம் பயனடைவர்:
* தற்பொழுது கனடாவில் வசித்தல் வேண்டும்
* முன்னைய கடவுச்சீட்டு விண்ணப்பித்த போதும் கனடாவில் வசித்திருத்தல் வேண்டும்
* முன்னைய கடவுச்சீட்டு பெற்ற பொழுது 16 அல்லது அதற்கு கூடிய வயதுடையவராயிருந்திருத்தல் வேண்டும்
* அவர்களுடைய கடவுச்சீட்டு
- ஐந்து வருடங்களுக்கு செல்லத்தக்கதாக இருந்திருத்தல் வேண்டும்
- ஜனவரி 31ம் திகதி 2002ம் ஆண்டிற்குப் பின் வழங்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்
- ஒருபோதும் பழுதடையாததாகவும், தொலைந்ததாகவோ, களவாடப்பட்டதாகவோ புகார் செய்யப்பட்டிருத்தல் கூடாது
- தற்போதைய பெயரிலேயே முன்னரும் வழங்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்

இந்த இலகு கடவுச்சீட்டு புதுப்பிக்கும் முறையானது விண்ணப்பதாரருக்கும், கடவுச்சீட்டுத் திணைக்களத்திற்கும் பயனளிக்கக் கூடியதொன்றாகும். விண்ணப்பதாரர் காலத்தை சேமிக்கக் கூடியதாகவிருப்பதுடன், பிறப்பு சாட்சி பத்திரம், பிரஜாவுரிமை ஆவணம் போன்ற முக்கிய ஆவணங்களை குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லாதும் போகின்றது. குறைந்தளவான நடவடிக்கைகளே தேவையாகவிருப்பதனால், திணைக்கள நடவடிக்கைகள் விரைவாக்கப்பட்டு கடவுச்சீட்டுகளை வழங்கக் கூடியதாகவும் இருக்கும். ஆனாலும் புதுப்பிக்கும் விண்ணப்பங்கள் தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்பு சரிபார்க்கும் நடைமுறைகளுக்குட்படுத்தப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கடவுச் சீட்டு திணைக்களங்களிலும், இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் எல்லா கடவுச்சீட்டு திணைக்களங்களிலும், தபால் மூலமாகவும் சமர்ப்பிக்கலாம்.

## ஒன்ராறியோ குடிவரவு அமைச்சின் 32 மில்லியன் நிதிவழங்கலில் ஒழுங்கீனம் அமைச்சர் மைக் கோல் பதவி துறப்பு

ஒன்ராறியோவின் குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சு கடந்த இரண்டு வருடங்களிலும் பல்வேறு அமைப்புகளுக்கும் உதவி நிதி (grant) வழங்கியதில் காணப்பட்ட ஒழுங்கீனம் அம்பலமானதையடுத்து, இதற்குப் பொறுப்பான அமைச்சராகவிருந்த மைக் கோல் கடந்த மாதம் 26ம் திகதி பதவி துறந்தார்.

மொத்தம் 32 மில்லியன் டாலர்கள் வழங்கலில் ஒழுங்கீனம் இருந்ததை ஒன்ராறியோ கணக்காளர் நாயகம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியதையடுத்து, அதற்கான பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அமைச்சர் தமது பதவியை ராஜிநாமாச் செய்தததாக டால்ரன் மக்கன்ரி அரசாங்கத்தின் செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோவில் இயங்கும் சுமார் நூற்றுப்பத்து (110) இனக் குழுமங்களுக்கு அவைகளின் பணிகளுக்கென வழங்கப்பட்ட அரசாங்க பணத்தை, முறையாகவும் சட்டத்துக்கு உட்பட்ட வகையிலும் வழங்காததை 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை பல மாதங்களுக்கு முன்னரே புலனாய்வுச் செய்திக் கட்டுரைகள் ஊடாக வெளிக்கொண்டு வந்தது.

இவைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்க மறுத்த மாகாண முதல்வர் மக்கன்ரி, இது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஒன்ராறியோ கணக்காளர் நாயகத்திடம் கேட்டிருந்தார். இந்த அறிக்கையில் 32 மில்லியன் நிதி வழங்கலில் இருந்த ஒழுங்கீனம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், சில இனக் குழுமங்களுக்கும் அமைப்புகளுக்கும் வழங்கப்பட்ட நிதியின் பின்னணி பற்றியும் குத்திட்டுக் காட்டப்பட்டிருந்தது.

உதாரணத்துக்கு, ஒன்ராறியோ கிரிக்கட் சங்கம் 150,000 மட்டும் நிதியுதவி கேட்க அதற்கு ஒரு மில்லியன் டாலர்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில் அரைவாசிப்பணம் அச்சங்கத்தால் செலவு செய்யப்படாமல் அதன் வங்கிக் கணக்கிலுள்ளது.

இதனைப் போல, இங்குள்ள சீனச் சமூக அமைப்பொன்று, யூதர் சமூக அமைப்பொன்று ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட மில்லியன் கணக்கான நிதியுதவிகள் பற்றியும் கணக்காளர் நாயகம் கேள்வி எழுப்பியுள்ளார் சில அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிக்கு, அவற்றிடமிருந்து விண்ணப்பமே வந்திருக்கவில்லையென்றும் தெரியவந்துள்ளது. அறிக்கையிலுள்ள இனக்குழுமங்களில் எந்தவொரு தமிழர் அமைப்பும் இருப்பதாகக் காணப்படவில்லை.

மேற்படி நிதி வழங்கலுக்கும் ஒன்ராறியோ லிபரல் கட்சிக்கும் சம்பந்தமெதுவும் இல்லையென்று கூறப்பட்டிருப்பினும், நிதியுதவி பெற்ற சில அமைப்புகளின் இயக்குனர்களாகவும், நிர்வாகிகளாகவும் லிபரல் கட்சி முக்கியஸ்தர்களும், சில மாகாண அமைச்சர்களின் ஆலோசகர்களும் இருப்பதாகத் தெரிவித்துள்ள கனடிய மைய ஊடகங்கள், அவர்களின் பெயர்களையும் வெளிப்படுத்தியுள்ளன.

ரொறன்ரோ நகரிலுள்ள எக்லின்டன்-லோரன்ஸ் தொகுதியின் மாகாண சபை உறுப்பினரான மைக் கோல், முன்னர் ரொறன்ரோ நகரசபை உறுப்பினராக இருந்தவர். மெல் லாஸ்ட்மன் நகர முதல்வராக இருந்தவேளை அவரது நெருங்கிய சகாவாக விளங்கியவர். தற்போது தமது அமைச்சர் பதவியையே இவர் துறந்தாராயினும், தொடர்ந்தும் லிபரல் மாகாண சபை உறுப்பினராக இருக்கின்றார்.

அக்டோபர் மாதம் 10ம் திகதி மாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு பத்து வாரங்களுக்கும் குறைவாக இருக்கையில், டால்ரன் மக்கன்ரியின் லிபரல் புதிய சவாலொன்றினை இதன் ஊடாகச் சந்திக்க நேர்ந்துள்ளது. நான்கு வருட ஆட்சியில் இவ்வாறான நெருக்கடியொன்றில் மேற்படி அரசு சிக்குண்டதும் இதுவே முதற்தடவை என்று சொல்லப்படுகின்றது. ஜோன் கிரட்சியனின் விளம்பர ஊழலை நினைவுபடுத்தும் எதிர்க்கட்சியினர், மக்கன்ரிக்கும் அக்டோபர் தேர்தலில் அதே நிலைமைதான் ஏற்படுமென எச்சரித்துள்ளனர்.

'இந்த ஊழலுக்கான முழுப்பொறுப்பையும் டால்ரன் மக்ன்ரியே ஏற்கவேண்டும்' என்று கன்சர்வேடிவ் தலைவர் ஜோன் ரோறி கூறியுள்ளார். 'மைக் கோல் அல்ல இங்கு பிரச்சனைக்குரியவர். டாலரன் மக்கன்ரிதான்" அன்று தெரிவித்துள்ள என் டி. பி. தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்ரன், "முழுப்பணமும் அடுத்த தேர்தலை மையப்படுத்தி வழங்கப்பட்டது" என்று அடித்துக் கூறியுள்ளார்.

"தேர்தலைச் சந்திக்கும் இக்காலத்தில் டால்ரன் மக்கன்ரியின் அரசைக் காப்பாற்றவே மைக் கோல் பதவி துறக்க நேர்ந்தது" என்றும் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவின் முன்நிலை Prediabetes

நீரிழிவின் முன்நிலை (Prediabtes) என்பது முழுமையான நீரிழிவு தொடங்குவதற்கு முந்திய கட்டமாகும். இரவு உணவு உட்கொண்டபின் காலை வரை எதுவும் உட்கொள்ளாமல் இரத்தப் பரிசோதனை செய்யும்போது, சீனியின் அளவு (Fasting blood sugar) 110 முதல் 126 வரை இருந்தால் 'நீரிழிவின் முன்நிலை' எனலாம்.

இந்த நிலையில் உள்ளவர்கள் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தால் நீரிழிவு வராமல் தடுக்கலாம். அல்லது அதுவராமல் நீண்டகாலம் தள்ளிப் போடலாம் என்பது இப்பொழுது ஆய்வுகள் மூலம் தெளிவாகியுள்ளது. உங்களுக்கு நீரிழிவின் முன்நிலை இருக்குமாயின் அது நீரிழிவு நோயாக மாறாமல் தடுப்பதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. முதலாவது வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் குருதியில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்துவது. இரண்டாவது மருந்துகள் உட்கொள்வதன் மூலம் செய்வது.

வாழ்க்கை முறை மாற்றங்கள் என்பன எவை? உணவு முறையில் மாற்றங்கள் செய்தல், எடையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல், தினசரி உடற்பயிற்சி செய்தல் ஆகியனவே அவை. இவற்றை ஒழுங்காகக் கைக்கொண்டால் அவருக்கு நீரிழிவு வருவதற்கான வாய்ப்பு 43 சதவிகிதத்தினால் குறைகிறது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவெனில், வாழ்க்கை முறை மாற்றங்களைக் கடைப்பிடிக்கின்ற காலம் வரைதான் நீரிழிவு வருவதற்கான சாத்தியம் குறையும் என்பதில்லை. அவற்றைக் கைவிட்ட பின்னரும் கூட அது நீடிக்கிறது. உதாரணமாக இந்த ஆய்வு ஏழு வருடங்களுக்குச் செய்யப்பட்டது. வாழ்க்கை முறை மாற்றங்களைக் கடைப்பிடித்த நான்கு வருடங்களுக்கு மட்டுமல்ல அவற்றைக் கைவிட்ட பின்னரும் கூட மேலும் 3 வருடங்களுக்கு நீரிழிவு வருவதற்கான வாய்ப்பு குறைந்திருந்தது என்பது நம்பிக்கை அளிக்கும் முடிவாகும்.

வாழ்க்கை முறை மாற்றங்களைச் செயற்படுத்த முடியாதவர்களுக்கும் அவற்றை ஓரளவு கடைப்பிடித்தும் குருதியில் சீனியின் அளவைக் குறைக்க முடியாதவர்களுக்கும் மருந்துகள் உதவக்கூடும். மெட்போமின் (Metformin), அகாபேஸ் (Acarbase), ரொஸிகிளிட்டசோன் (Rosiglitazone) ஆகிய மாத்திரைகள், நீரிழிவு வராமல் தடுப்பதற்கு உதவுகின்றன. இதுவும் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, நீரிழிவு வர வாய்ப்புள்ளவர்கள், மேற்கூறியவற்றில் ஒரு முறையை வைத்திய ஆலோசனையுடன் கடைப்பிடிப்பது உசிதமானது. அத்துடன், பிரசர் இருந்தால் அதற்கு உபயோகிக்கும் மருந்துகளையும் அவதானமாகத் தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில், அடலோல் (Atenolol), எச்சிடி (HCT) ஆகியனவும் அவை சார்ந்த மருந்துகளும் நீரிழிவு வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கக்கூடும்.

# சிறுநீரக நோயினால் இறப்பவர்கள் அதிகம்!

சிறுநீரகங்கள் முதுகிற்கு கீழே, இடுப்புப் பகுதியில் அவரை விதை வடிவில், உடலில் உள்ளே உள்ளன. அமைதியாக வேலை செய்யும் முக்கியமான ஒரு பாகம். அதேநேரத்தில் அறிகுறியின்றி பாதிக்கப்படும் உறுப்பும் சிறுநீரகமேயாகும். 90 சதவீதம் பாதிக்கப்பட்ட பிறகுதான் சிறுநீரகம் செயல் இழந்துள்ளது என்பதை அறியலாம். இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதே சிறுநீரகத்தின் பணியாகும். சுருக்கமாகச் சொன்னால் இதை வடிகட்டி என்றே கூறலாம். நம் உடலில் உள்ள தண்ணீர் சத்தையும், உப்பு மற்றும் இரத்தக் கொதிப்பு போன்றவற்றை சமச்சீராக வைக்க கிட்னி பெரும் பங்கு வகிக்கின்றது. இந்தியாவில் சுமார் 20 இலட்சம் பேர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் வருடத்திற்கு 2 இலட்சம் பேர் புதிய நோயாளிகளாக வருகின்றனர். முதிர்ச்சியுற்ற கான்சரை விட சிறுநீரக நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என ஆய்வுகள் கூறுகின்றன. சிறுநீரகம் பாதிப்படைவதற்கு காரணம் என்ன? மாறிவரும் சுற்றுச்சூழல், உடல் உழைப்பின்மை, மன அழுத்தம், சர்க்கரை வியாதி, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுகின்றது. சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட 30 சதவீதத்தினர் காலப்போக்கில் சிறுநீரக பாதிப்படைகின்றனர். சிறுநீரகத்தில் கற்கள் உள்ள நோயாளிகள் முறையான சிகிச்சை மேற்கொள்ளாமல் இருக்கும் பொழுதும் சிறுநீரக பாதிப்பு ஏற்படுகின்றது. அதுபோலவே மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் சாப்பிடும் வலி நிவாரண மாத்திரைகளாலும் பாதிப்பு ஏற்படுகிறது.


அறிகுறிகள்: அளவு குறைந்து சிறுநீர் வெளியேறுதல், முகம், கால்வீக்கம், சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல், மூச்சிரைப்பு, தொடர்ச்சியான வயிற்றுவலி, வாந்தி, தூக்கமின்மை உள்ளிட்டவை சிறுநீரக பாதிப்பின் அறிகுறிகளாகும்.

எப்படி தெரிந்து கொள்வது: சிறுநீரில் வெளியேறும் புரதச்சத்தின் அளவு, இரத்தத்தில் யூரியா மற்றும் கிரியேட்டினின் அளவை வைத்து சிறுநீரக பாதிப்பினை தெரிந்து கொள்ளலாம். மேலும் தேவைப்படும் நோயாளிகளுக்கு அல்ட்ரா சவுண்ட் மற்றும் சிட்டிஸ்கேன் போன்ற பரிசோதனைகள் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

சிறுநீரகத்தை பாதுகாக்கும் வழிகள்: சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பினை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். உணவில் உப்பின் அளவை சரியாக பயன்படுத்தப்பட வேண்டும். உடல் பருமனை குறைக்க முறையான உடற்பயிற்சி அவசியம். புகைப்பிடிப்பதை அறவே நிறுத்த வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் சிறுநீரக கற்களால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் சிறுநீரக வியாதிகளை கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது. உடனடியாக தகுந்த மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் மருந்து, மாத்திரைகளை உட்கொள்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'ஹரிபொட்டர்' சாதனை 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனை

புத்தக விற்பனையில் இதுவரை யாரும் சாதிக்காத சாதனையை ஏற்படுத்திய ஹரிபோட்டர் புத்தகத்தின் கடைசி மற்றும் 7வது புத்தகம் சனிக்கிழமை நள்ளிரவு 12:01கரு 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனை செய்யப்பட்டது.

பிரபல ஹொலிவுட் படங்களுக்கு இருக்கும் வரவேற்பை விட அதிகளவு வரவேற்பைப் பெற்றுள்ள ஹரிபொட்டர் புத்தகத்தை வாங்க எல்லா நாடுகளிலும் நடு இரவில் பல மணிநேரம் காத்திருந்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் புத்தகத்தை வாங்கிச் சென்றனர். மத்திய லண்டனில் பிகார்டிலி என்ற இடத்தில் இருக்கும் வோட்டர்ஸ்டோன் என்ற புத்தகசாலையில் மட்டும் வரிசையில் நின்றவர்கள் ஐயாயிரம் பேர்.

இஸ்ரேலில் உள்ள யூத மக்களுக்கு சனிக்கிழமைதான் புனிதநாள். அன்று சப்பாத் என்ற சடங்கு நடப்பதால் அன்றைய தினம் யாரும் எந்த வேலையும் செய்ய மாட்டார்கள். கடைகள், வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும். இருந்தும் கடும் எதிர்ப்புக்களுக்கிடையே நள்ளிரவு 12:01க்கு கடைகள் திறக்கப்பட்டு ஹரிபொட்டர் புத்தகம் விற்றிருக்கிறார்கள்.

ஏற்கனவே வெளிவந்த ஹரிபொட்டர் புத்தகங்கள் 32 கோடியே 50 இலட்சம் பிரதிகள் விற்றுள்ள நிலையில் இப்போது வெளிவந்திருக்கும் கடைசிப் புத்தகம் அமெரிக்காவில் மட்டும் ஒரு கோடியே 20 இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டுள்ளன. நேற்றும் 22 இலட்சம் புத்தகங்களுக்கு இன்டர்நெட் மூலம் பதிவு வந்துள்ளதாம். இங்கிலாந்து தபால்துறை வரலாற்றில் இதுவரை இல்லாதபடி 6 இலட்சம் புத்தகங்களை தபால் மூலம் அனுப்ப பதிவு வந்துள்ளது. அமெரிக்காவில் இது 18 இலட்சம். வெளிநாடுகள் அனைத்திலும் ஹரிபொட்டர் புத்தகத்தின் கடைசி புத்தகத்தை வாங்குவதற்கு கூட்டம் அலைமோதியது.

இதேபோல் சென்னையிலும் ஹரிபொட்டர் புத்தகத்தின் கடைசிப் புத்தகத்தை வாங்குவதற்கு மக்கள் அதிகாலை முதலே காத்திருந்தனர். சென்னையில் 3 மாதங்களுக்கு முன்பே பதிவு செய்திருந்தனர். இவர்களும் நேற்று புத்தகத்தை வாங்குவதற்கு ஆர்வமுடன் காத்திருந்தனர்.

# உலகில் அகதிகள் தொகை ஒரு கோடி நாற்பது இலட்சம்

சர்வதேச அளவில் அகதிகளின் எண்ணிக்கை கடந்த வருடம் 2 மில்லியனால் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அமெரிக்காவின் அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகளுக்கான குழு 2006 இல் 14 மில்லியன் அகதிகள் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ஈராக்கிலிருந்து பெருமளவு மக்கள் வெளியேறியுள்ளதே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 7,90,000 பேர் அங்கிருந்து வெளியேறி சிரியா, ஜோர்தானில் தஞ்சமடைந்துள்ளனர்.

சிரியாவிற்கு 4,49,000 பேரும் ஜோர்தானிற்கு 2,50,000 பேரும் சென்றுள்ளனர். எகிப்து 80,000 பேரை உள்வாங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் அதிர்ச்சியடைய வேண்டிய தருணமிது என அந்த குழுவின் தலைவர் லிவினியா லிமோன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய பெண்கள் 80 வீதமானவர்கள் மத்தியிலும் 50% ஆண்கள் மத்தியிலும் வேலை வாய்ப்பின்மை காணப்படுகிறது.

12 வயது சிறுமிகள் கூட விபசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுக்களும் குடும்ப உறுப்பினர்களும் கூட பெண்களையும் யுவதிகளையும் கடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

UNHCR
The UN Refugee Agency

புஷ் நிர்வாகம் அதிகளவு அகதிகளுக்கு இடமளிக்காதது குறித்தும் கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் பற்றி எவ்வாறான கருத்து காணப்பட்டாலும் அமெரிக்கா அவர்களுக்கு ஆதரவு வழங்கிய அகதிகளை புறக்கணிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியட்நாம் யுத்தத்தின் இறுதியில் 1,34,000 அகதிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் இடமளித்ததை சுட்டிக் காட்டியுள்ள லிமோன், இந்த முன்னுதாரணத்தை பின்பற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போர்ட்டினை மனித நேயம் மிக்கவர் என வர்ணித்துள்ள அவர், அகதிகளை உள்வாங்குவதற்காக அவர் காங்கிரஸுடன் மோதினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2006இல் ஈராக்கிய அகதிகளின் எண்ணிக்கை 16,87,000 ஆக காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தனது நாட்டில் ஒரு மில்லியன் ஆப்கானிஸ்தானியர்கள் இருப்பதாக தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 10 வருட காலப் பகுதியில் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு, தொழில் புரிவதற்கான உரிமை மறுக்கப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை 8.8 மில்லியன் என்றும் அமெரிக்காவின் அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகளுக்கான குழு குறிப்பிட்டுள்ளது.

2001 இல் சர்வதேச அளவில் 15 மில்லியன் அகதிகள் காணப்பட்டது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இந்த எண்ணிக்கையே இன்றுவரை அதிகமானதாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் பாதுகாப்பு, தடுத்து வைத்தல், நடமாட்ட சுதந்திரம் மற்றும் தொழிலுக்கான உரிமை என்ற நான்கு விடயங்களிலும் அகதிகள் நிலை மோசமானதாகவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் தொடர்

பகுதி
17

# காதில் விழுந்தவை

210. *அவர் கடலில் மிதந்த பொதியை எடுத்துப் பிரித்துப் பார்த்தபொழுது, அது வெடித்து, அவருடைய முகமும் கைகளும் காயப்படுத்தப்பட்டன* (2007-03-10). *காயப்படுத்தப்பட்டன* என்பது இங்கு வேண்டாத ஒரு செயப்பாட்டு வினை. **காயப்பட்டன**.

211. *ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எதனையும் இந்தியாவும் அமெரிக்காவும் ஆதரிக்காது* (2007-03-12). *இந்தியாவும் அமெரிக்காவும்* என்பது பன்மை. ஆதரிக்காது என்பது ஒருமை. *இந்தியாவும் அமெரிக்காவும் ஆதரிக்கா அல்லது ஆதரிக்கமாட்டா.*

212. *யாழ்ப்பாணத்தில் மக்களை இருட்டான நிலையில் வைத்து வாகனங்களில் ஏற்றிச் செல்கிறார்கள்* (2007-03-12). *...மக்களை* **இருளில்** *வைத்து...*

213. *இடம்பெயர்ந்த மக்கள் செல்லிடமின்றி அலைகின்றார்கள்* (2007-03-16). *செல்லிடம்* என்பது சரியே. எனினும் **போக்கிடம்** என்பதே மரபு.

214. *யாழ் பல்கலைக்கழகத்தில் சிறிலங்கா படையினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளது* (2007-03-16). The presence of Sri Lankan forces... *படையினரின்* **நடமாட்டம்**.

215. *தமிழக பட்ஜெட் அதாவது நிதிநிலை அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்பட்டது* (2007-03-23). (1) Budget என்பது a periodic, especially annual estimate of the revenue and expenditure of a country, organization etc. (Oxford). காலந்தோறும், குறிப்பாக ஆண்டுதோறும் மதிப்பிடப்படும் (ஒரு நாட்டின் அல்லது அமைப்பின் அல்லது அத்தகையவற்றின்) வருமானம் மற்றும் செலவினம் ஈழநாட்டில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இது **வரவு செலவுத் திட்டம்** எனப்பட்டு வருகிறது. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு முன்னர் வெளிவந்த சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் இது *மன்ற வரவு செலவுத் திட்டப் பட்டியல்* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (2) *பட்ஜெட் அதாவது நிதிநிலை அறிக்கை* என்பது சரியல்ல. வரவு செலவுத் திட்டம் (budget) வேறு, நிதிக் கூற்று (financial statement) வேறு. (3) ஈழநாட்டில் *அறிக்கை* (report) என்றும், *கூற்று* (statement) என்றும் நுணுக்கமான முறையில் இனம்பிரிக்கப்படுகிறது.

216. *ஈரானுக்கும் பிரித்தானியாவுக்கும் மத்தியில் முறுகல் நிலை தோன்றியுள்ளது* (2007-03-25). ஈரானுக்கும் பிரித்தானியாவுக்கும் **இடையில்...**

217. *சிறிலங்கா படையினர் வாகரையை நோக்கித் தொடுத்த படையெடுப்பு* (2007-03-25). ...தொடுத்த படையெடுப்பு என்பது பொருந்தாது. **தொடுத்த தாக்குதல்** அல்லது **மேற்கொண்ட படையெடுப்பு**.

218. *கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது வான்புலிகளின் இரண்டு பறப்புகள் குண்டு வீசின* (2007-3-26). Flight என்பது (1) பறப்பு (2) வானூர்தி (3) படிவரிசை (4) தப்பியோடல்... என்றெல்லாம் பொருள்பட வல்லது. புலிகளின் அதிகாரபூர்வமான அறிவிப்பில் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின்மீது வான்புலிகளின் இரண்டு **வான்கலங்கள்** (aircraft) குண்டு வீசின என்றே குறிப்பிடப்பட்டுள்ளது (Tamilnet, 2007-03-25).

219. *இந்தியக் கடற்படையின் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் பிரிவு தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது* (2007-03-26). இந்தியக் கடற்படை ஆயுதம் கடத்துவதாகவும், அதனைத் தடுப்பதற்கான பிரிவு தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் எவரும் வலிந்து பொருள்கொள்ளப் போவதில்லை. **எனினும், ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் இந்தியக் கடற்படையின் பிரிவு தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது** என்று குறிப்பிட்டால் அவ்வாறு வலிந்து பொருள் கொள்ள முடியாது.

220. *ஐந்து உலங்கு வானூர்திகள் சேதமடைந்துள்ளதாக, காயமடைந்த படையினரை ஆதாரம் காட்டி ஊடகங்கள் தெரிவித்துள்ளன* (2007-03-27). Quoting என்பது ஆதாரம் காட்டி என்று குறிப்பிடப்பட்டிருக்கலாம். எனினும் *படையினரை ஆதாரம் காட்டி* என்பது பொருந்தாது. *படையினரை* **மேற்கோள்** *காட்டி....*

221. *துடுப்பெடுத்தாட்டம்* (2007-04-05). Cricket = **துடுப்பாட்டம்**.

222. *தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள்* (2007-04-06). இலங்கை வாழ் முஸ்லீம் மக்கள் தங்களை வெறுமனே *முஸ்லீம் மக்கள்* என்றே இனங் காட்டுகிறார்கள். அவர்கள் தங்களை *தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள்* என்றோ, *சிங்களம் பேசும் முஸ்லீம் மக்கள்* என்றோ, *ஆங்கிலம் பேசும் முஸ்லீம் மக்கள்* என்றோ இனம் பிரிப்பதில்லை. இலங்கை வாழ் முஸ்லீம் மக்களின் தாய்மொழி தமிழே. அவர்களுடைய மார்க்க நூல்கள் தமிழிலேயே அமைந்துள்ளன. தமிழ் நாட்டுக் குடிமகனாகிய (இந்திய குடியரசுத் தலைவர்) அப்துல் கலாம் அவர்கள் *நான் ஒரு தமிழன்* என்னும் பெருமை படைத்தவன் என்று முழங்கியதுண்டு. அது தமிழ்கூறு நல்லுலகம் முழுவதையும் பெருமைப்பட வைக்கும் முழக்கம் அல்லவா!

223. *திருகோணமலையில் தபால் பொதிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன* (2007-04-10). Store என்பது இங்கு *களஞ்சியப்படுத்து* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. களஞ்சியப்படுத்துவது தானிய வகைகளுக்குப் பொருந்தும், தபால் பொதிகளுக்குப் பொருந்தாது. **திருகோணமலையில் தபால் பொதிகள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன** அல்லது **குவித்து வைக்கப்பட்டுள்ளன** அல்லது **இட்டு வைக்கப்பட்டுள்ளன.**

224. *இலங்கையில் படைமயப்படுத்தப் பட்ட ஆட்சி ஏற்படக்கூடும்* (2007-04-12). (1) இலங்கையில் ஏற்கனவே *படைமயப்படுத்தப்பட்ட ஆட்சியே* (militarized rule) நிலவுகிறது. (2) இனிமேல் **படை ஆட்சி** (military rule) ஏற்படக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அதிசயங்கள் ஏழு - புதிய பட்டியல்
# The new list of The Seven Wonders of the World

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் மாத்திரமன்றி இற்றைவரை எல்லாப் பொது அறிவுப் பரீட்சைகளிலும் கேட்கப்படும் ஒரு வினா - "உலக அதிசயங்கள் யாவை" - என்பதாகும். இந்தப் பட்டியலில் காணப்பட்ட பெயர்கள் நாளுக்கு நாள் வேறுபட்டுக் கொண்டிருப்பதை பலரும் அவதானித்து இருக்கலாம். இதில் எது சரியான பட்டியல் என மூளையைக் குழப்பியபடி இருந்தோம். இவ்வாறு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது இப்பட்டியலில் காணப்பட்ட பல உலக அதிசயங்கள் காலப்போக்கில் நிலநடுக்கம், சிதைவுகள், மற்றும் இயற்கைக் காரணிகளால் அழிந்து போய்விட்டன. இந்தக் குழப்பத்திற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பது போல "புதிய உலக அதிசயங்கள் 7" என்ற ஒரு பட்டியலை 07/07/77ல் வெளியிட்டுள்ளனர். இதனை குழப்பத்திற்கு முற்றுப்புள்ளியா அல்லது இன்னும் ஒரு புதுக் குழப்பமா என தீர்மானிக்கச் சில நாட்கள் செல்லப் போகிறது. ஏனெனில் இப் போட்டியின் ஆரம்பத்தில் எகிப்தியர்கள் "எங்கள் பிரமிட்டுகளைப் பற்றி வாக்கு எடுப்பதா" என எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் இப் போட்டியின் அமைப்பாளர்கள் வாக்கெடுப்பு இல்லாமலேயே பிரமிட்டுகளை உலக அதிசயங்களில் ஒன்று என அங்கீகரித்துவிட்டனர். ஆகவே வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 07 அதிசயங்களோடு கௌரவ அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட பிரமிட்டையும் சேர்த்தால் மொத்தம் இப்பொழுது உலக அதிசயங்களின் எண்ணிக்கை எட்டாகிறது. இந்தப் புதுக் குழப்பத்திற்கு தற்போது ஒரு விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள புதிய பட்டியல் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்டன் நகரின் சொக்கர் விளையாட்டுத் திடலில் 50,000 மக்கள் முன்னிலையில் பல்வேறு பட்ட கேளிக்கைகளின் மத்தியில் அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 100 மில்லியன் வாக்குகள் (Internet, Cell phone Text messages) இணையம், தொலைபேசி குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்பட்டது. இந்த வாக்கெடுப்பு 1999ல் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த Bernard Weber என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 200 பெயர்கள் இதற்காகப் பிரேரிக்கப்பட்டன. பின்பு 2006ம் ஆண்டின் ஆரம்பத்தில் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் 21 பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன. இதில் 14 பெயர்கள் தோற்கடிக்கப்பட்டு எஞ்சிய 7 வெற்றி பெற்ற பெயர்களே இன்றைய 07 உலக அதிசயங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த வாக்கெடுப்பில் மேலும் ஒரு குறைபாடு ஏற்பட்டுள்ளது. இத்தனை காலமும் அழிந்து, அற்றுப்போன பெயர்களை கொண்டிருந்த பழைய பட்டியலை நீக்கி ஒரு புதுப்பட்டியலை "புதிய 7 உலக அதிசயங்கள் அறக்கட்டளை" தயாரித்தது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். இந்தப் புதுப் பட்டியலில் உள்ள 07 உலக அதிசயங்கள் பின்வருமாறு:-

1. இந்தியாவின் தாஜ்மகால் - Taj Mahal of India. 2. சீனாவின் பெருஞ்சுவர் - The Great Wall of China. 3. மெக்சிக்கோவின் சிச்சென் இட்சா பிரமிட் - Mexico's Chichen Itza Pyramid. 4. பிறேசில் நாட்டு கிறீஸ்துவின் சிலை - Brazils' Statue of Christ Redeemer 5. பெரு நாட்டின் மச்சு பிச்சு - Per's Machu Picchu. 6. ஜோர்டன் நாட்டின் பெற்றா - Jordon's Petra. 7. ரோமாபுரியின் கொலோசியம் - Collossium of Rome

இனி ஒவ்வொரு உலக அதிசயத்தையும் நோக்குவோம்:-

1. இந்தியாவின் தாஜ்மகால் - முதல் 10 இடங்களையும் அறிவித்த பொழுது தாஜ்மகால் நான்காவது இடத்தில் இருந்தது. கடைசி நேரத்தில் இது முதலாம் இடத்தைக் கைப்பற்றியது. இந்தியர்கள் இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்து ஆரவாரப்பட்டனர். டெல்லி, அக்ரா, மற்றும் வட மாநிலங்களில் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களைக் காணக் கூடியதாக இருந்தது. வெளிநாடுகளில் இருக்கும்



கனகேஸ்வரி நடராஜா
ஆசிரியர், இலங்கை-கனடா

இந்தியர்களும் இவ்வெற்றியைக் கொண்டாடினர். மொகலாய சக்கரவர்த்தி ஷாஜகான், தனது மனைவி மும்தாஜின் ஞாபகார்த்தமாக அக்ராவில் யமுனை நதிக் கரையில் கட்டியெழுப்பிய காதல் சின்னமே இத் தாஜ்மகால். முற்று முழுதாக மாபிள் கற்களால் கட்டப்பட்ட இந்த காதல் மாளிகை 1632ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1648ல் முற்றுப் பெற்றது. இதனைக் கட்டி முடிக்க 22,000 தொழிலாளர் இரவு, பகலாக வேலை செய்தனர்.

2. சீனப் பெருஞ்சுவர் - மொங்கோலியர்களின் படையெடுப்பை தடுக்கும் நோக்கத்துடன் கிறீஸ்துவுக்கு முன் 5ம் நூற்றாண்டில் அரசாண்ட மன்னர்களால் இது கட்டுவிக்கப்பட்டது. இச் சுவர் 6400 கிலோமீற்றர் நீளமுள்ளது. 25 அடி உயரமும், 15 - 30 அடிவரை அகலமும் உடையது. உலகிலேயே மனித முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட அதி நீளமான சுவர் இதுவே எனக் கருதுகின்றனர். இதனைக் கட்டி முடிக்க 300,000 தொழிலாளர் தேவைப்பட்டனர். உலகை வலம் வந்த விண்வெளிக் கப்பல்கள் தமது பிரயாணத்தின் பொழுது விண்வெளியிலிருந்து இதனை காணக் கூடியதாக இருந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் சந்திரனில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதனாகிய நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனிலிருந்து இதனை அடையாளம் காண முடியாமல் இருந்ததாகக் கூறுகிறார்.

3. மெக்சிக்கோவின் சிச்சென் இட்சா பிரமிட் - மெக்சிக்கோவில் மாயன் நாகரீகத்தின் போது இது நிறுவப்பட்டது. இது முதலில் கி.பி 400 வில் கட்டப்பட்டது. பின்பு இரண்டாவது பட்டணம் ஒன்று கி.பி 850-1150 வரையில் கட்டப்பட்டது. இங்கு 150 வருடங்கள் அரசாட்சி நடைபெற்றது. ஆனால் திடீரென 1400ல் இப்பிரதேசம் கைவிடப்பட்டது. இங்கு பெரும் உள்நாட்டு யுத்தங்கள் நடைபெற்றதால் பஞ்சம் ஏற்பட்டு அதனால் இவ்விடம் கைவிடப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர். மாயா இனத்தவர் பாம்புகளை வணங்கினர். இக் கட்டிடக் கலையின் நுட்பம் காரணமாக வடக்கு ஏற்றத்தில் சூரியன் இங்கு உச்சம் கொடுக்கும் காலங்களில் (Equnox) வருடம் இருமுறை பாம்பு போன்ற தோற்றம் விழுவதுண்டு.. இதனைப் பார்ப்பதற்கு பல்லாயிரக் கணக்கான உல்லாசப் பிரயாணிகள் செல்வதுண்டு.

4. பிறேசில் நாட்டின் கிறீஸ்துவின் சிலை - இது பிறேசில் நாட்டின் தலை நகராகிய றயோடி ஜெனீரோ துறைமுகத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு மலை உச்சியில் நிறுவப்பட்டுள்ளது. 700 தொன் நிறையுள்ள இந்தச் சிலையின் உயரம் 105 அடி. இது காணப்படும் கொக்கோவாடா மலையின் உயரம் 2296 அடியாகும். பிறேசில் நாடு போர்த்துக்கேயரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற நூற்றாண்டு விழாவை 1922ல் கொண்டாடுவதற்காகவே இது கட்டப்பட்டது. இதனைச் செதுக்கி முடிக்க 9 ஆண்டுகள் தேவைப்பட்டன. இது 1931ல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பிறேசில் நாட்டு மக்கள் தம் நாட்டிற்கு வருகை தருபவர்களை இரு கரங்களையும் விரித்து மனமார வரவேற்பார்கள் என்பதனை குறிக்கும் வகையில் இச் சிலையின் கைகளை விரித்து வரவேற்கும் தோரணையில் செதுக்கியுள்ளனர். தற்பொழுது இச்சிலைக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் உச்சியை அடைவதற்கு 220 படிகள் ஏற வேண்டும். அதனால் வயது முதிர்ந்தோர் இதனை ஏற முடியாமல் கஷ்டப்படுவதைக் கண்டு அண்மையில் இதற்கு லிப்ட் (elevator) பூட்டியுள்ளனர்.

5. பேரு நாட்டின் மாச்சு பிச்சு - பேரு நாட்டில் அண்டீஸ் மலை உச்சியில் 2430 மீற்றர் உயரத்தில் ஆதிவாசிகளால் கட்டப்பட்ட ஒரு பட்டணமாகும். இது 15ம் நூற்றாண்டு காலத்தில் இன்கான் சக்கரவர்த்தி பச்சாகுட்டிகதினால் கட்டப்பட்டது. பெரிய அம்மை நோய் பரவியதால் இப் பட்டணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்
## கனடியக் காட்சிகள்

# கனடிய தின விழா

தமிழர் தகவலின் சாதனைகள் பல. அவற்றில் ஒன்று கடந்த 10 வருடங்களாகக் கனடா நாளைக் கொண்டாடி வருவது. அவற்றில் ஒன்றில் கலந்து கொண்ட சாதனையும் எனக்கு உண்டு.

29-06-2007 வெள்ளிக்கிழமை சரியாக மாலை 6:30 மணிக்குக் கனடா கந்தசாமி கோயில் கலாச்சார மண்டபத்தில் காலை வைத்தேன். மேப்பிள் இலை தாங்கிய கனடா நாள் முத்திரையைச் சட்டையில் ஒட்ட ஒருவர் வரவேற்க மற்றொருவர் கனடியக் கொடி ஒன்றைக் கையில் வைத்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம், அமைதி வணக்கம் ஆகிய மூன்றுக்கும் எழுந்து நிற்குமாறு அவையோரை முன்னதாகவே அவர் வேண்டிக் கொண்டதால் இருந்து எழும்பும் உடற்பயிற்சி உண்டு பண்ணும் சத்தங்கள் தவிர்க்கப்பட்டன. கனடிய தேசிய கீதம் பாடப்படும் பொழுது எல்லோரும் தேசியக் கொடியை உயர்த்திக் கொண்டு பாடியது கண்டு கனடாத் தாயும் கசிந்திருக்க வேண்டும். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள்.

பழகிய முகங்கள் மத்தியில் பழகாத ஒரு முகத்தைக் கொண்டு வந்து இருத்தினார்கள். அவர்தான் அன்றைய பிரதம அதிதி ஒன்ராறியோ மாகாண சட்டமன்ற (ஸ்காபரோ தென்மேற்கு) உறுப்பினர் திரு. லொறன்சோ பெரார்டிநெற்றி அவர்கள். அவர் பக்கமாக இருந்த திரு. நா. சிவலிங்கம் அவர்களும் நானும் பேச்சைக் கொடுத்தோம். அவரது அடிகொடி இத்தாலியாம். தன்னுடைய பெயரும் நீண்ட பெயர்தான் என்று பகடியும் விட்டார். கனடிய தின விழாவின் பலன்களில் ஒன்றை அனுபவித்த உணர்வு எனக்கு.

பிரதம விருந்தினர் தமது உரையிலும் பல்கலாசாரத்தின் முக்கியத்துவத்தையும் பக்குவத்தையும் வலியுறுத்தினார்.

இப்படி எத்தனையோ பேர் இதற்கு முன்னரும் பேசியிருக்கிறார்கள்; எழுதியும் இருக்கிறார்கள். இருப்பினும் பல்கலாசாரம் முக்கியத்துவம் பெற்ற அளவுக்குப் பக்குவப்படாதிருப்பதும் நன்கு தெரிகிறது. முக்கியத்துவப்படுத்துவது கொள்கை - அரசாங்கக் கொள்கை. அதனைப் பக்குவப்படுத்துவது நடைமுறை - மனிதாபிமானச் செயற்பாடுகள்.

பல தொழில் நிலையங்களில் இனவேறுபாடு புகைந்து கொண்டே இருப்பதை அவ்வப்போது வெளிவரும் செய்திகள் சுட்டிக்காட்டவே செய்கின்றன.

கலைநிகழ்ச்சிகள் தரமானவையாகவும் தமிழ் உணர்வு மிகுந்தவையாகவும் இருந்தன. ஒரு சிறப்பு என்னவென்றால் முதியவர், இளைஞர், சிறுவர் என்று எல்லா வயதினரும் பங்குபற்றி அசத்தியதுதான்.

வழக்கம் போல கனடிய தின சிறப்பு விருது வழங்கல், கலைஞர்களை மதிப்புச் செய்தல், மாணவர் பொது அறிவுப் போட்டிப் பரிசளிப்பு ஆகிய நிகழ்வுகளும் இனிதே நடந்தேறின.

இவ்வாண்டுக்கான கனடிய தின சிறப்பு விருதினை பிரபல சமூகத் தொண்டரும் நகைச்சுவை எழுத்தாளரும் நடிகருமான டாக்டர் கதிர் துரைசிங்கம் அவர்களுக்குத் தமிழர் தகவல் வழங்கியது மிகவும் வரவேற்கத்தக்கது என்பதனை ஏகோபித்த கைதட்டல்கள் காட்டின. கடைசிவரை சிரித்துக் கொண்டே கை தட்டியவர் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். காரணம் கதிர் துரைசிங்கம் அவரது மாணவர்.

இவ்விதமாகக் கனடாவின் 140வது அகவை நாளைக் கொண்டாடி அடைக்கலந் தந்த அன்னைக்கு நன்றி செலுத்த நல்ல வாய்ப்பினை அளித்த தமிழர் தகவலுக்கும் விழாவை அடக்கமாகவும் அழகாகவும் ஒழுங்கு செய்த ஈழத்தமிழர் தகவல் நிலையத்துக்கும் எமது வாழ்த்துக்கள்!

கைவிடப்பட்டது. பின்பு ஸ்பானியர்கள் இன்கா சாம்ராஜ்யத்தை தோற்கடித்தனர். இதன் பின்பு மூன்று நூற்றாண்டு காலம் இது இருப்பதே ஒருவருக்கும் தெரியாமல் போய்விட்டது. பின்பு 1911ல் Hiram Bingham என்னும் ஜேல் பல்கலைக்கழகப் பேராசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் கிட்டத்தட்ட 200 கட்டிடங்கள் காணப்படுகின்றன. இவை வீடுகள், கோவில்கள், பொது இடங்கள், கிட்டங்கிகள் முதலியவற்றை கொண்டுள்ளது. இங்குள்ளவர்கள் சோளம், உருளைக் கிழங்கை படிக்கட்டு வேளாண்மை மூலம் செய்தனர்.

6. ஜோர்டன் நாட்டின் பெற்றா - இதற்கு நிகரான கட்டடம் உலகில் வேறு எங்கும் இல்லை எனலாம். ஊதா சிவப்பு நிற மலையில் இது செதுக்கப்பட்டுள்ளது. ஒரு விதமான அசாதாரண அழகு இதில் காணப்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு Nabataen's என அழைக்கப்பட்ட ஒரு சவுதி அரேபியரால் இது நிர்மாணிக்கப்பட்டது. இது மதகுருமார் வசிப்பதற்காகவே கட்டப்பட்டது. பல மைல்கள் தூரம் இதன் நீளமாகும். கல்லறைகள், குளியல் அறைகள், கோவில்கள், மரணச் சடங்கு நடைபெறும் மண்டபங்கள் முதலியன இதில் உள்ளன. ரோமர் காலத்தில் 400 வருடங்களுக்கு இது சிறப்புடன் விளங்கியது. பின்பு ரோம சக்கரவர்த்தி Trojan ஆல் கைப்பற்றப்பட்டது. 106 கி.பி இல் ரோமர் இதனை கைப்பற்றினர். 1812ல் சுவிஸ் ஆராய்ச்சியாளர் Johann Burckhardt இதனைக் கண்டுபிடித்தார். அதற்கு முன்பு ஒரு 300 வருட காலம் இது கைவிடப்பட்டு, அறவே மறக்கப்பட்ட நிலையில் இருந்தது.

7. ரோமாபுரியின் கொலோசியம் - இதனை ஒரு மகிழ்ச்சியினதும், துயரத்தினதும் அடையாளம் எனக் கூறுவர். ஏனெனல் இங்கு நடைபெற்ற போட்டிகள், விளையாட்டுகள் பார்ப்போருக்கு மகிழ்ச்சியளித்தது. அதே சமயம் மிகவும் கொடூரமான போட்டிகளில் பலரும் சித்திரவதைப்பட்டனர். கி.பி. 72ல் இத்தாலிய மன்னன் வெஸ்பாசியினால் தொடங்கப்பட்டு 81ல் கட்டி முடிக்கப்பட்டது. இந்த பிரமாண்டமான அரங்கில் 50,000 பேர் இருக்க முடியும். கிட்டத்தட்ட 500 ஆண்டுகள் இதனை பாவனைப்படுத்தினர். பின்பு நிலநடுக்கம், கல்லுகள் களவாடுவோர்களால் இது சிதைந்துவிட்டது. இன்னும் இதன் அமைப்பிலேயே விளையாட்டு அரங்குகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதால் இதனை விளையாட்டு அரங்குகளுக்கு ஒரு முன்னோடி என்று சொன்னால் மிகையாகாது. நான்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தின் தரைமட்ட தளத்தில் யானை, புலி, கரடி முதலியன அடைக்கப்பட்டதற்கான கூடங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் அங்கு நடந்த கொடூரமான போட்டிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.

உலகின் புதிய 7 அதிசயங்கள் பற்றி பாடசாலை ஆரம்பமாகியவுடன் ஆசிரியர்கள் ஒப்படைகள் நிச்சயமாகத் தருவார்கள். ஏனெனில் இது இன்று ஒரு முக்கியமான விடயமாகும் (Hot topic). விடுமுறை காலத்தில் பிள்ளைகள் இணையத் தளத்தில் மேற்கொண்டு இதைப் பற்றி வாசித்து தமது அறிவை வளர்த்தல் நலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கீரனின் சோதிடப் புரட்டு நூல் வெளியீடு

முழக்கம் செய்தி இதழில் நக்கீரன் (வே. தங்கவேலு) எழுதிய 'சோதிடப் புரட்டு' கட்டுரைத் தொடர் இப்போது தனி நூலாக மலர்ந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா செப்டம்பர் மாதம் எட்டாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5:30 மணி முதல் கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெரியார் திராவிடக் கழக பொதுச்செயலாளர் திரு. விடுதலை இராசேந்திரன் விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்று உரையாற்றவுள்ளார், விபரங்களுக்கு 416 281 1165, 416 335 0562, 416 261 9099 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.


## உலக சைவப் பேரவையின் சைவ சித்தாந்த உரைகளும் இளையோர் பட்டறையும்

உலக சைவப் பேரவை - கனடா நடத்தும் சைவ சித்தாந்த வகுப்புப் பேருரைகள் ஆகஸ்ட் மாதம் 1ம் 4ம் 8ம் 11ம் 15,ம் 18ம் திகதிகளில் ஸ்காபரோ நகர மண்டப கமிட்டி அறையில் பிற்பகல் 5:30 மணி முதல் 9:00 மணி வரை நடைபெறும். சிறுவர்களுக்கான சைவ சமயப் பட்டறை றிச்மன்ட்ஹில் இந்து ஆலய மண்டபத்தில் ஆகஸ்ட் 6ம் திகதி காலை 9:30 மணி தொடக்கம் பிற்பகல் 4:00 மணி வரையும் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 416 266 5161 அல்லது 416 893 5910 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## இலங்கை நகரக் காவலர் சங்க ஒன்றுகூடல்

முன்னை நாள் இலங்கை நகரக் காவலரின் ஒன்றுகூடல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை காலை 10:30 மணி தொடக்கம் மாலை வரை மோனிங்சைட் பூங்காவில் ஏரியா இலக்கம் 02 இல் நடைபெறவுள்ளது. காவல்துறை உறவுகளே! பிரிந்த எம் உறவுகளையும் பிரிந்த மண்ணையும் நினைவில் நிறுத்திட ஒன்றுகூடுவோம். வாருங்கள். இந்த நிகழ்வில் இளைஞர்களுக்கும், பெரியோருக்கும் புதுமையான விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அத்துடன் மதிய போசனம், B.B.Q என்பனவும் இடம்பெறும்.

தொடர்புகளுக்கு: ராதா 416 - 836 5825



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை**

தொடர் 11

## கரை

நீர்நிலையோடு முடிகின்ற நிலப்பரப்பை கரை என்கிறார்கள். கடற்கரை, குளக்கரை, ஆற்றங்கரை, கம்மாக்கரை என இக்கரைகள் அழைக்கப்படுவதுண்டு. பயன்படுத்தப்படும் வேறு சில பொருட்களின் ஓரங்களையும் கரை என அழைக்கப்படுவதுண்டு. வேட்டிக்கரை, வயற்கரை என்பன சில.

சிலர் ஓரத்தைக் கரை என்பர். ஓரம் வேறு கரை வேறு. விளிம்புகள் ஓரங்களாகின்றன. எல்லா ஓரங்களும் கரைகளாவதில்லை. கடலோரம் என்பதற்கும் கடற்கரை என்பதற்கும் பொருளில் வேறுபாடு உண்டு.

கரை வித்தியாசமானது. புலப்படுத்தும் பொருளில் ஆழமானது. பொதுவாக நீரைத் தொடுகின்ற மண்ணின் விளிம்புகளே கரைகள் எனப்பட வேண்டும். நீரோடு சேர்ந்த பொருட்கள் பல கரைவதுண்டு. நீரோடு சேர்ந்த நிலமும் கரைந்து கொண்டிருக்கும்.

காலமெல்லாம் கரைந்து கொண்டிருப்பதனாலேயே நீர் ஓர நிலப்பரப்பு கரை எனப்பட்டது. காற்றாடி வர நாம் செல்லும் இக்கரைகள் அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலப்பரப்புகள்.

கரைகள் அலையோடு விளையாடுவதில்லை. போராடுகின்றன. கரையேறிவரும் அலை மண்ணைத் தழுவிச் செல்வதில்லை. அகப்பட்ட துகளை அபகரித்துச் செல்கின்றது.

ஓயாது ஓடிவரும் அலையோடு ஓய்வின்றிப் போராடும் கரை எத்தகையது?

காலாற நடக்க, நீராடி மகிழ, படகோடி ஆட இன்னும் சொல்லலாம் கரை நாம் பார்க்கும் பார்வை குறித்து.

நீர் பெருகி ஊர் புகுந்து நிலம் கொள்ளாமல் காக்கப் போராடும் காவலனாக கரையை எத்தனை பேர் பார்த்திருப்பீர்கள்?

நிலப்பரப்புக்குள் புகவென வேகமெடுத்து வரும் அலைகளைத் தடுத்து நிறுத்தித் தோற்றோடச் செய்யும் காவற்படை இக்கரை அல்லவா?

பெருக்கெடுத்துப் பேரலையாய் சீறி வரும் அலையோடு மோதும் முதற்படை இக் கரைதான்.

கரை தோற்ற பின்புதான் எந்த அலையும் ஊருக்குள் புக முடியும். கரை நாம் காற்றாடி மகிழும் இடம் மட்டுமல்ல... நம்மைக் காத்தருளும் கடவுளும் கூட.

அலை தடுக்கும் கரை போல, பகை தடுக்கும் கரைகள் நம் சமூகத்திற்குள்ளும் இருக்கின்றன. பகைகளுக்கு பல வடிவங்கள் உண்டு. சமூகத்தை அழிக்க அரிக்க அது பல கோலங்கள் கொள்ளும். அப்போதெல்லாம் எழுந்து வரும் அப்பகை தடுக்க புறப்படுகின்ற கரைகள் இல்லையெனில் நம் சமூகம் என்றோ புரையேறிப் போயிருக்கும்.

இயல்பை அழிக்கும் பகைகள் எவ்வாறு இயற்கையிலேயே உருவாகி வருகின்றதோ அதுபோல அவற்றை எதிர்கொள்ளும் கரைகளும் இயல்பாகவே பிறக்கின்றன.

கடமையைச் செய்யும் கரைகள் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்ப்பதில்லை. தூற்றுவதற்கும் போற்றுவதற்கும் அப்பாற்பட்டவை இக்கரைகள்.

கரைகள் மீது வீசப்படுகின்ற கறைகளைக் கூட அலைகளே கரைத்து விடுகின்றன.

இனியாயினும் காலாறக் கால் பதிக்கும் போதெல்லாம் கரைகளைக் கொஞ்சம் கனம் செய்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

# குடிக்கும் குழாய் நீர்

வட அமெரிக்காவில் குடிப்பதற்குகந்த நல்ல குழாய் நீர் கிடைக்கும் நகரங்களில் மூன்றாவது இடத்தைப் பெற்று மகிழ்ச்சியில் மிதக்கின்றது ரொறன்ரோ.

ஒக்கலகோமா நகர் முதலாமிடத்தையும் கன்பொஸில் ஒரு நகரம் இரண்டாம் இடத்தையும் தமதாக்கி வெற்றியில் நீந்துகின்றன.

அமெரிக்க தண்ணீர் பாவனை அமைப்பின் ஆய்வு மையம் இப் போட்டி முடிவுகளை ஜுன் மாத இறுதியில் இல்லங்கள் தோறும் பெருக விட்டது.

அமிலம் - காரம் - இனிப்பு - புளிப்பு என எந்தச் சுவையுமற்றதாகவும் இரசாயன - தாவர - மிருக வாசனை எவையும் இல்லாதனவாகவும் பரிசோதிக்கப்பட்ட குழாய் நீர் பலவும் சாரலடித்தன.

எனினும் 1955ம் ஆண்டுக்குப் பின்பு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கான நீர்க் குழாய்களுக்கே இது பொருந்தும் என்னும் தகவல் பயத்தில் மூழ்க வைக்கின்றது.

பரந்த ரொறன்ரோ பிரதேசத்திலுள்ள 1955ம் ஆண்டுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட பல கட்டிடங்களுக்கு, பிரதான நீர் வழங்கல் குழாய்களுடன் இணைக்கப்படும் சிறிய குழாய்கள் ஈயத்தை கசிய விடுவதே இதற்குக் காரணம் என்பது நீரச்சத்தைத் தருகின்றது.

வீட்டு குழாய் நீரில் ஈயக் கலப்புள்ளதா என நகர அதிகாரிகள் மூலம் இலவசமாக பரிசோதனை செய்து கொள்வதற்கு 416 392 2894 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்பதால் அவ் அழைப்புகள் நிரம்பி வழிகின்றன.

ஆறு மணித்தியாலங்களுக்கும் மேலாக பாவனையற்றிருந்த நீர்க் குழாய்களில் ஈயப் படிவு அதிகரித்திருக்கும். அதனால் சுமார் ஐந்து நிமிடத்திற்கு தண்ணீரை நன்கு திறந்துவிட்ட பின்னரே சுத்தமான நீர் அலையடிக்கும்.

ஈயம் கலந்த தண்ணீரால் கர்ப்பிணிகளுக்கும் ஏழு வயதுக்குட்பட்ட சிறார்களுக்கும் பாதிப்பு அதிகமாக ஏற்படும் என்பதனால் அவர்கள் உள்ள வீடுகளுக்கும் பாடசாலைகளுக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும் ஈயப் பரிசோதனை துரிதமாக்கப்படும் என்பது கவனத்தை அள்ளுகின்றது.

அத்துடன் குழந்தைகளுக்கான உணவைத் தயாரிப்பதற்கும் சமைப்பதற்கும் குடிப்பதற்கும் குளிர் நீர் பாதுகாப்பானது என்பதும் சூடான குழாய் நீரில் அதிக ஈயம் கரைந்திருக்கும் என்பதும் மேலதி தகவல் துளிகள்.

பரந்த ரொறன்ரோ பிரதேச கட்டிடங்களுக்கு சுமார் 500,000 குழாய்கள் பிரதான நீர் விநியோகக் குழாய்களிலிருந்து நீரை வழங்கிடினும் கிட்டத்தட்ட 65,000 வரையிலான குழாய்கள் மட்டுமே ஈயக் கலப்புடையவை என்பது சமுத்திரத்தில் ஒரு துளி போலத்தான்.

வருடமொன்றிற்கு 3500 குழாய்கள் வீதம் 13 வருட காலத்தில் ரொறன்ரோ பிரதேச குழாய்கள் முழுவதையும் ஈயக் கலப்பற்றதாக மாற்றுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஏழு கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது கூட வெறும் மனச்சலவையல்ல.

பிரதான குழாயிலிருந்து வளவின் எல்லை வரை நகரசபை திருத்திவிடும். ஆனால் எல்லையிலிருந்து வீடு வரையான குழாய்களை வீட்டுக்காரரே திருத்த வேண்டும். அதற்கான செலவு 1000 முதல் 2500 வரை இருக்கும் என்ற செய்தியும் கசிகின்றது.

கர்ப்பிணிகளும் வயது குறைந்த பிள்ளைகள் உடைய வருமானம் குறைந்த பெற்றோர்களும் நிதி உதவிக்கும் தகுதியானவர்கள் என்ற அரச அறிவிப்பு கருணையால் நனைகின்றது.

## பன்னிரண்டாவது திருவருட்செல்வர் விழா

கனடா சைவ சித்தாந்த மன்றமும் சைவசமய குரவர் பாடசாலையும் இணைந்து நடத்தும் பன்னிரண்டாவது திருவருட் செல்வர் விழா இந்த மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி முதல், பிற்பகல் 5:00 மணி வரை றிச்மன்ட்ஹில் இந்து ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. டாக்டர் அ. சண்முகவடிவேல் தம்பதிகள் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றனர்.

## மருத்துவப் பராமரிப்பில் சைவமய ஆதரவுச் சபை

மருத்துவப் பராமரிப்புக்கான சைவமய ஆதரவுச் சபையின் அங்குரார்ப்பண விழாவும், மேற்படி பராமரிப்பில் சைவசமய ஆதரவுச் சேவையாளரின் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இந்த மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஏழு மணியளவில் றிச்மன்ட்ஹில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இதன் தலைவர் டாக்டர் அ. சண்முகவடிவேல் அறிவித்துள்ளார். ஒன்ராறியோ சுகாதார அமைச்சர் ஜோர்ஜ் சிமிதர்மன் இதில் பிரத,ம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

## ஜொற் - Jott

கைத்தொலைபேசி வைத்திருப்பவர்கள் இலகுவில் பாவிக்கக்கூடிய ஒரு சேவையின் பெயரே இதுவாகும். இந்த இலவச சேவையை பாவிப்பதற்கு இணையத்தில் சென்று உங்கள் விபரங்களைக் கொடுத்து, ஒரு கணக்கினை ஆரம்பித்தல் வேண்டும். உங்களுக்கு ஒரு கட்டணமற்ற தொலைபேசி இலக்கம் கனடாவிற்குள் எங்கிருந்தும் எங்கும் அழைக்கக்கூடியதாக வழங்கப்படும். நீங்கள் கனடாவிற்குள் எங்காவது சென்றிருக்கையிலோ அல்லது அதைப்பற்றியோ, அல்லது ஒருவருக்கு அவசர தகவலோ அனுப்ப வேண்டியிருப்பின், இந்த இலக்கத்தை அழைத்து உங்கள் தகவலை தெளிவான குரலில் பதிவு செய்யவும். உங்கள் தகவல் எழுத்து வடிவிற்கு மாற்றப்பட்டு, மின்னஞ்சலாகவும், எழுத்து தகவலாகவும் (Text message) மற்றையவரை விரைவாக சில நிமிடங்களில் சென்றடையும். இன்னும் வேகமாக தகவல் சென்றடைய வேண்டுமாயின் நீங்கள் கதைத்து பதிவு செய்த ஒலி வடிவாகவே வைத்திருந்து, மின்னஞ்சலுடன் ஒலி இணைப்பாக (audio attachment) அனுப்பும் முறையினை தேர்வு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழ் வானொலி

## நட்சத்திரத் திருவிழா சிறுகதைப் போட்டியில்

### குரு அரவிந்தனுக்கு முதற் பரிசு



கனடியத் தமிழ் வானொலி தனது மூன்றாவது நட்சத்திரத் திருவிழாவையொட்டி உலகளாவிய ரீதியில் நடத்திய சிறுகதைப் போட்டியில் குரு அரவிந்தன் முதற் பரிசைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய 'சுமைகள்' சிறுகதை 500 டாலர்களைப் பரிசாகப் பெறுகின்றது. குரு அரவிந்தன் கடந்த பத்தாண்டுகளுக்குள் எழுத்துலகில் முன்னணிக்கு வந்தவர். ஏற்கனவே பல போட்டிகளில் பரிசுகளைப் பெற்றவர். தமிழர் தகவலின் வருடாந்த மலர்களில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வருபவர்.

**இப்போட்டியில் பரிசு பெற்றவர்கள் விபரம்:**

1வது - சுமைகள் - குரு அரவிந்தன் - பிராம்ரன்
2வது - வெறும் சோத்துக்கே வந்தது - சி. பரமானந்தன் - நெதர்லாந்து
3வது - அஞ்சு லெச்சம் (ஐந்து லட்சம்) - பவானி - மார்க்கம்
4வது - அவள் ஊருக்குப் போகிறாள் - திருமதி. கலாமலர் கதிர்காமநாதன்
5வது - இருப்புகள் தொடர்கின்றன - சிவவதனி பிரபாகரன் - ஸ்காபரோ
6வது - தீர்ப்பு - தி.மி. தியாகராஜா - ஸ்காபரோ
7வது - வேண்டாத உறவுகள் - ரவீந்திரநாதன்
8வது - அந்த நாள் ஞாபகம் அகதியாய் - எஸ். ரேணுகா - ஆஜென்ரீனா
9வது - கூண்டுக் கோழிகள் - சகாதேவன் - மார்க்கம்
10வது - பாதுகாப்பு - பொன் சிவகுமாரன்

**நட்சத்திரத் திருவிழா தமிழியல் அறிவுப் போட்டி முடிவுகள்**

இளநிலை
1. பிரணவி பரமாநந்தன்
2. சிந்துஸா பரராஜசிங்கம்
3. அபினயா பவானந்தன்

கீழ்நிலை
1. தக்ஷயந்தன் நாதன்
2. சுரபி யோகநாதன்
3. சாரிகா நவநாதன்

இடைநிலை
1. திவ்யா ஸ்ரீபாஸ்கரன்
2. பிரணவன் செல்வாநந்தன்
3. சாம்பவி சண்முகாநந்தன்

மேற்பிரிவு
1. ஜனனி இராசநாதன்
2. லதுமிதன் உதயபாஸ்கரன்
3. ருபிஷனா கலைச்செல்வன்



குயின்ரஸ் துரைசிங்கம் 14

**கணினிப் பக்கம்**

# காக்க காக்க கணினி காக்க...

**கணினியொன்றை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை:**

கணினியின் அடிப்படை விடயங்கள், அதன் உள்ளடக்கங்கள், அதன் பிறப்பும் வரலாறும் என்று பல விபரங்களைப் பார்த்தோம். இனி கணினிப் பாவனைக்கு வருவோம்.

கணினியொன்றை வாங்கலாம் என்று முடிவெடுப்பதற்கே பலருக்கு நீண்டகாலம் பிடித்து விடுகிறது. இருக்கின்ற சேமிப்பை வைத்துக் கொண்டு, அடுத்து என்ன பொருளை வாங்குவது என்று முதன்மைப்படுத்தல் (prioritizing) எழுகின்ற போது, பொருட்பட்டியலில் உள்ள கணினி என்ற விலை கூடிய சாதனத்தின் தேவை, கீழ்நோக்கி சென்றபடியே இருக்கும். இது அவசியம் தானா என்ற கேள்வி வரும்போதெல்லாம், அடுத்த முறை பார்க்கலாம் என்பதே எமது பதிலாய் அமைந்து விடுகிறது. ஆனால், இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியமானது. கணினி வாங்குவதென முடிவெடுத்தால், உடனடியாக அதை வாங்குவதற்கு முயற்சிப்பது நல்லது. காரணம், அதனால் விளைகின்ற அபரிமிதமான நன்மைகள் தான்.

ஒரு காலத்தில், அலுவலகத்தில் உயர் பதவியில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே கணினி என்ற நிலை இருந்தது. பின்னர் தொழில் சார்ந்ததாக, ஏதாவது தொழிலில் ஈடுபடும் அனைவருக்கும் கணினி அவசியம் என்ற சூழ்நிலை தோன்றியது. இதன் அடுத்த கட்டமாக, நாளாந்த அலுவல்களைக் கவனிக்க ஒரு கணினி அவசியம் என்ற நிலை உருவானது. தற்போது, கணினி என்பது ஒரு தனிநபரின் கட்டாயத் தேவையாக மாறிவிட்டது என்பதே யதார்த்தம். வயது வேறுபாடின்றி, பாடசாலை மாணவர்கள் தொடக்கம், சின்னஞ் சிறுவர்கள், பெற்றோர், முதியவர்கள் என்று அத்தனை பேருக்கும் கணினி ஒரு சிறந்த கொடையாக, துணையாக, நண்பனாக, பாதுகாப்பாளனாக துணைவருவதைப் பார்க்க முடிகிறது.

இப்போதெல்லாம் வீட்டுத் தேவைக்கான கணினியின் (அனைத்தும் உள்ளடக்கம்) விலை மிகவும் குறைந்து விட்டது. புதியவைகளை, 500 இலிருந்து 1000 டாலர்களுக்குள் வாங்கி விடலாம். இந்தத் தொகை அதிகம் அல்லது சேகரிப்பில் இல்லை என்று தோன்றினால், கிட்டத்தட்ட 200 அல்லது 300 டாலர்களுக்கு, பாவித்த (ஆனால் நல்ல நிலையிலுள்ள) கணினியை வாங்கி, அதிலே அனைத்துப் பயன்பாட்டையும் பழகிக் கொண்டு, பின்னர் தேவையையும் வசதியையும் பொறுத்து கணினியின் தரத்தை சீர்செய்து கொள்ளலாம். கணினி வைத்திருப்பது அவசியம் என்பதேயொழிய, புதிய உயர்தர கணினி வைத்து என் அண்ணன் மனைவியின் கணினித் தரத்தை முந்துகின்ற வெற்றி உண்மையில் அவசியமற்றது.

எங்கள் தேவையையும் நோக்கத்தையும் பொறுத்து, அதற்குத் தகுந்ததொரு கணினியைப் பெற்று, தினமும் குறைந்தது அரை மணி அல்லது ஒரு மணி நேரத்தையாவது இதற்கென்றே ஒதுக்கி, நாமாகவே பலவற்றைக் கற்றுக் கொண்டு விட முடியும். இக் கணினியை பெற்றுக் கொள்ளும் முகவரிடமே, கணினியின் இயக்கம், அடிப்படைப் பாவனை, மென்வலைக்குச் செல்லும் வழி, திரும்பவும் வெளியே வந்து கணினியை அணைத்து விடுவது வரை கேட்டுத் தெரிந்து கொண்டு பெற்று வந்தால், மீதியை நாங்களாகவே கற்றுக் கொள்ளலாம்.

My Car, My Road, My petrol (எனது கார், எனது வீதி, எனது எரிபொருள்) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நாங்கள் தன்னம்பிக்கையுடன் முயல வேண்டும் என்பதைத் தான் இப்படிச் சொன்னார்கள். முயற்சி திருவினையாக்கும், முயற்சியுடையான் இகழ்ச்சியடையான் என்ற இன்னும் ஏராளமான பழமொழிகளும் இதைத்தான் சொல்லுகின்றன. இவற்றைப் படித்துவிட்டு, எப்போதும் போல், ஒரு பெருமூச்சு விட்டு, சா... இதைக் கூடத் தவற விட்டு விட்டேனே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல் அட.. இப்போது அறிந்து கொண்டோமே என்று மகிழ்ந்து, உடனே ஆனவற்றைச் செய்தால், விரைவில் உலக நீரோட்டத்திற்குள் நாமும் நேரகாலத்தோடு இணைந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## ஒரு பாதிரியாரும் குடும்ப வாடகையும்

நகரிலுள்ள தேவாலயமொன்றுக்குச் சென்ற ஒருவன் பாதிரியாரைச் சந்தித்து தனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தின் நிலையை விளக்கி உதவுமாறு கேட்டான்.

"அந்தக் குடும்பத்தின் தலைவன் வேலையின்றி இருக்கிறான். மனைவி ஒரு நோயாளி. மூன்று பிள்ளைகள். அரச உதவி உணவுக்குத்தான் போதும். ஒரு வீட்டின் 'பேஸ்மென்ட்'டில் வசிக்கிறார்கள். இந்த மாத வாடகை இன்னமும் செலுத்தவில்லை.

வீட்டு உரிமையாளன் பொல்லாதவன் வாடகை நாளைக்குள் செலுத்தாவிட்டால் அவர்களை வெளியேற்றி விடுவான் வீட்டுக்காரன். நீங்கள் அவர்களுக்கு 500 டாலர் கொடுத்து உதவவேண்டும்" என்பது அவனது வேண்டுகோளாக இருந்தது.

விபரமாக எல்லாம் கேட்ட பாதிரியார் உதவ விரும்பினார். அதற்கு முதல் ஒரு கேள்வி கேட்டார்.

"நீ யாரப்பா? அந்தக் குடும்பத்துக்கு நீ என்ன முறை?"

:நான்தான் அந்த வீட்டின் சொந்தக்காரன்" என்று பதில் வந்தது.

## சீனப் பெரு மனிதருக்கு உலகச் சிறுமனிதர் வாழ்த்து

உலக சாதனைகளில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை அறியாதார் இருக்க முடியாது. இது சீனப் பெரு மனிதர் பற்றியது.

பாவோ சிசுனுக்கு 26 வயது. ஒல்லியான தோற்றம். உயரம் ஏழு அடி எட்டு அங்குலம் (ஒரு தடவை அண்ணாந்து பாருங்கள்). இவர்தான் உலகின் இன்றைய மிக உயர்ந்த மனிதர்.

இவருக்கு அண்மையில் கோலாகலமாகத் திருமணம் நிகழ்ந்தது. மணப்பெண்ணும் சீனரே. இவர் உயரம் ஐந்தடி இரண்டு அங்குலம் மட்டுமே!
மணமகனான உயர்ந்த மனிதரை வாழ்த்தவென திருமணத்துக்கு ஒருவர் மங்கோலியாவிலுள்ள பாவோடு என்ற இடத்துக்குச் சென்றிருந்தார்.

இவரது உயரம் 73 சென்டி மீட்டர் மட்டுமே. உலகின் மிகக் குட்டையான மனிதர் இவர்தானாம். மணமகனை வசதியாக அருகே நின்று (இருந்து) வாழ்த்தவென விசேடமாக ஒரு மேசை போடப்பட்டிருந்தது. அதன் உயரம் ஆறு அடிக்கும் மேலே. குட்டையர் மேசைக்கு மேல் ஏறி நின்றுதான் நெட்டையரை வாழ்த்திச் சென்றுள்ளார்.

## பெருமைக்குரிய 501வது ஆள் இவர்

யாழ்ப்பாணப் பாடசாலையொன்றின் மாணவர்கள் நடத்திய கலைவிழா ரொறன்ரோவில் அண்மையில் பெரிய அளவில் நடைபெற்றது. இருவர் மட்டும் பங்கேற்ற ஓரங்க நாடகமொன்று அறிவு பூர்வமான கருத்துகளுடன் கலகலப்பாக இடம்பெற்றது.

இதில் இடம்பெற்ற உரையாடல் ஒன்று:

முதலாம் ஆள்: "எனது பாடசாலைப் பழைய மாணவர்கள் மத்தியில் எனக்கு தனியான மதிப்புண்டு".

அடுத்த ஆள்: "அதெப்பபடிச் சொல்ல முடியும். புரியவில்லையே!".

முதலாம் ஆள்: "நான் செய்யும் தொழில் காரணமாக".

அடுத்த ஆள்: "என்ன தொழில்".

முதலாம் ஆள்: " எங்கள் பாடசாலைப் பழைய மாணவர்களில் கனடாவில் 'றியல் எஸ்டேட் ஏஜன்டாகப்' பணிபுரிபவர்களில் நான் 501 ஆவது ஆள். இதனால் நான் எங்கு சென்றாலும் தனி மதிப்பு. எங்கள் ஆசிரியர்கள் இதனையிட்டுப் பெருமை கொள்ள முடியும்" என்றார்.

**உதாசனன்**
**உலா விருந்து**

## டாக்டர் பட்டத்துடன் நடிகர்கள் விளையாட்டு!

சென்னையில் நடிகர் விஜய்யின் 'போக்கிரி' படவிழா நடைபெற்றது. கனவுலகத் தொழிற்சாலையின் அனைத்துச் சிகரங்களும் மேடையில் இருந்தனர்.

நடிகர் சத்தியராஜ் பேச ஆரம்பித்தார். நடிகர் பிரபு சற்று மெலிய வேண்டும் என்பதில் தமக்கிருக்கும் அக்கறையைப் பின்வருமாறு எடுத்துக்காட்டினார்.

"இங்குள்ள பல்கலைக் கழகமொன்று எனக்கு டாக்டர் பட்டம் வழங்கத் தீர்மானித்துள்ளது. விரைவில் கிடைத்து விடும்.

அதன் பின்னர் தம்பி பிரபு உடல் இளைப்பதற்கு மருந்து வேண்டும் என்றால் என்னிடம் வரலாம். கட்டணம் பெற மாட்டேன்" என்று சத்தியராஜ் பேச மண்டபம் அதிரும் கரவொலி.

க(ல்)லாநிதிப் பட்டம் படும்பாடு பெரும் பாடு!

## பிளெயர் விரும்பாத மகிந்தவின் அன்பளிப்பு

பிரித்தானியப் பிரதமராவிருந்து அண்மையில் ஓய்வு பெற்றவர் ரொனி பிளெயர். தமது பதவிக் காலமான பத்தாண்டுகளில் தமக்குக் கிடைத்த அன்பளிப்புகளில் சில;வற்றை அவர் தம்முடன் எடுத்துச் செல்லாமல் விட்டுச் சென்றுள்ளார்.

கிடைத்த அன்பளிப்புகள் அனைத்தும் வேறு நாடுகளின் தலைவர்களால் அவ்வப்போது நினைவுப் பரிசாக வழங்கப்பட்டவை.

தம்முடன் எடுத்துச் செல்லாதவைகளில் ஒன்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழங்கிய 'Tea Set' என்று சொல்லப்படும் தேநீர் தயாரித்து அருந்தும் கோப்பைகள் அடங்கிய பெட்டி. இந்தச் செய்தியைப் படித்த மகிந்தர் கொதிப்படைந்துள்ளாராம்!

ஈராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஆஸ்திரியா, குவைத் ஆகிய நாடுகளின் தலைவர்கள் வழங்கியிருந்த அன்பளிப்புகளையும் பிளெயர் தம்முடன் எடுத்துச் செல்லவில்லை.

எந்த அடிப்படையில் தெரிவு நடைபெற்றதோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பளிப்பு சிறப்பளிப்பு விருதளிப்பு



### தமிழர் தகவல் கனடா தின விருது

தமிழர் தகவல் பத்தாவது ஆண்டாக நடத்திய கனடிய தினவிழா (கனடாவின் 140வது பிறந்த நாள்) ஜூன் 29ம் திகதி கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வருட தமிழர் தகவல் கனடிய தின விருது, சமூக கலை இலக்கியப் பணிகளுக்காக திரு. கதிர் துரைசிங்கம் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் திரு. துரைசிங்கத்தை அறிமுகம் செய்து உரையாற்ற விழாவின் பிரதம புரவலர் கே. சபேசன் தங்கப் பதக்கம் சூட்ட, விழாவின் பிரதம அதிதி திரு. லொறன்சொ பெரொர்டினெற்றி எம். பி. பி விருதினை வழங்கிச் சிறப்புச் செய்தார். திரு. கதிர் துரைசிங்கம் ஏற்புரை நிகழ்த்தினார்.





### இலக்கியத் தோட்ட இயல் விருது

கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்த இயல் விருது விழா இம்முறை ரொறன்ரோ பல்கலைக் கழக வில்லியம் டு மண்டபத்தில் நடைபெற்றது. 2006ம் ஆண்டுக்கான இயல் விருது இங்கிலாந்தில் வசிக்கும் நாடகாசிரியரும் நெறியாளரும் நடிகருமான ஏ. ஏ. தாசீசியஸ் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. அதற்கான கேடயத்தையும் 1500 டாலர் பணப்பரிசையும் பேராசிரியர் எஸ். வி. அரசு கையளித்தார். பேராசிரியர் செல்வா கனகநாயகம், எழுத்தாளர் அ. முத்துலிங்கம் ஆகியோரின் நெறியாள்கையில் வைபவம் நடைபெற்றது.



### கவின் கலாலயா நிகழ்கலை தமிழ்ப் பண்பாடு விருது





நடன ஆசிரியை சிவா திவ்யராஜனின் கவின் கலாலயா நிகழ்கலை தமிழ்ப் பண்பாடு அமைப்பின் வருடாந்த விழா அண்மையில் ரொறன்ரோ ஆர்மீனியன் மண்டபத்தில் நடைபெற்றது. கலாலய மாணவர்களின் பல்வேறு நடன நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு நடுவில் சிறப்பு நிகழ்ச்சியாக பண்டிதர், ஆசிரியர், ஆசிரிய விரிவுரையாளர், கவிஞர் ம. செ. அலெக்சாந்தர் அவர்களைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது. அதிபர் பொ. கனகசபாபதி இதற்குத் தலைமை தாங்கினார். தமக்கு வழங்கப்பட்ட விருதுக்கான பட்டயத்தை அலெக்சாந்தர் பெற்றுக் கொண்ட பின்னர் திரு. பொ. கனகசபாபதி, திரு. வி. திவ்யராஜன், திருமதி. அலெக்சாந்தர் ஆகியோர் கூட்டாக நிற்பதை மேலுள்ள முதற் படத்திலும், திரு. அலென்சாந்தர் ஏற்புரை வழங்குவதை இரண்டாவது படத்திலும் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# பிரிய மனமின்றிப் பிரிந்தேன்

1970ம் ஆண்டினிலே ஜுன் மாதம் என எண்ணுகிறேன் வைரவிழாக் கட்டிடத்திற்காக அத்திவாரம் போட்டோம். இச்சமயம் பார்த்து கல்வி அமைச்சு பல பதவிகளுக்கு நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரியிருந்தது. திரு. இராமசாமி முதலாம் தர விசேட ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தார். நான் இரண்டாம் தர அதிபர் பதவிக்கும், இரண்டாம் தர விசேட ஆசிரியர் பதவிக்கும் விண்ணப்பித்திருந்தேன். திரு. இராமசாமி முதலாம் தர விசேட ஆசிரியர் பதவிக்கு தேர்வு பெற்றார். ஆனால் மகாஜனாவில் இன்னும் ஒரு முதலாந்தர ஆசிரியர் மாத்திரமே இருந்தமையால் அவருக்கு இடமாற்றம் வழங்காமல் தொடர்ந்தும் மகாஜனாவிலேயே சேவையாற்றுவதற்குக் கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்தது. மற்றைய முதலாந்தர விசேட ஆசிரியர் நான் ஏற்கனவே கூறிய திரு மகாதேவா அவர்கள். இவர் பாடசாலையின் துணை அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். எனக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்தது. அதிபர் அவர்கள் அற்புதமான இரு நற்சாட்சிப் பத்திரங்கள் தந்தார். ஒன்று எனது கடமை உணர்வு கற்பித்தல் திறமை, மற்றும் பாடசாலையில் நான் செய்கின்ற புற வேலைகள் பற்றியதாகவும் மற்றையது எனது நிர்வாகத் திறமையை பற்றி விளக்க விபரமாகவும் அமைந்திருந்தது. என்னை நேர்முகப் பரீட்சை செய்த குழுவினிலே முன்னர் மகாஜனாவுக்கு வந்து எனது வகுப்பு நடத்தலைப் பார்வையிட்ட சமரநாயகா இருந்தார். எனது பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய விபரங்களை நான் எடுத்துச் சென்றிருந்தேன். அதனை குழுவின் பார்வைக்குச் சமர்ப்பித்தேன். அவர்கள் அதனைப் பார்த்து சிலாகித்த போது இந்த நண்பர் "அவர் ஒரு தலைசிறந்த ஆசிரியர். நான் நேரடியாகவே என் கண்களால் பார்த்துள்ளேன்" என்றார்.

எனக்கு உச்சி குளிர்ந்தது. நேர்முகப் பரீட்சை முடிவுற்றதும் நான் வெளியே நின்றேன். அவர் வெளியே போகும் போது என்னைப் பார்த்து முறுவலித்துவிட்டுச் சென்றுவிட்டார். எனக்குச் சிறிது நம்பிக்கை ஏற்படவே செய்தது. ஆனால் "there can be a slip between the cup and the lip", என்பார்களே - தேர்வு பெறுவது திறமை, தேர்வு செய்யப்பட்டபின் அறிவித்தல் வரும்வரை அந்தப் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படாமல் இருப்பது அதிர்ஷ்டம். இது பின்னர் நான் அனுபவவாயிலாகக் கண்டது. இப்போ அமைச்சகத்திலே ஒரு காவல் தெய்வம் வேண்டும். அது அங்கே இருந்தமையால் கொஞ்சம் நிம்மதி. நான் ஊர் திரும்பியதும் எப்படி என அதிபர் முதல் மனைவி வரை கேட்டவர்களுக்கு ஒரே பதில் தான், "சொல்லத் தெரியவில்லை".

1971ம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் திகதி தொடக்கம் ஒரு வாரம் பாடசாலை மைதானத்திலேயே வைரவிழாவினைக் கொண்டாடுவதாகவும் பொருட்காட்சி கலைவிழா நடத்துவதாகவும் தீர்மானித்தோம். இதற்கான ஆயத்தங்களைத் தீவிரமாக நாம் மேற்கொண்டிருந்த போது தான் எனக்கு பதவி உயர்வுக் கடிதம் வந்தது. அதிபரிடம் காண்பித்தேன். அதிபர் பாடசாலையை எத்தனை நேசித்தவர் எனக் காண முடிந்தது. அவருக்கு என்னைப் பாராட்டவே தோன்றவில்லை. திகைத்துப் போயிருந்தார். பார்க்கவே பரிதாபமாக இருந்தது. "அப்போ! அப்போ", என அவர் வாய் முணுமுணுத்தது. "நீங்கள் போனால் இந்த வேலைகள் யாவும்?" என்றார். சேர் நான் விசேட ஆசிரியர் பதவிக்கும் விண்ணப்பித்துள்ளேன். அந்தப் பதவி கிடைத்தால் நான் இதனை நிராகரிக்கிறேன் என்றேன். பின்னர் தான் சுயநிலைக்கு வந்து என்னைப் பாராட்டினார்.

இது சம்பந்தமாக அவர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது அது சாத்தியமில்லை எனத் தெரிந்தது. ஒருவருக்கு இரண்டு பதவி உயர்வுகள் வழங்க மாட்டார்களாம். ஆகவே எனக்கு மற்றைய பதவி உயர்வு கிட்டாது எனத் தெரிந்தது.

அடுத்து நடந்தது ஒரு பெரும் பயங்கரம். 1971 மார்ச் மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாறியது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் பறி கொடுத்தது. அது பரவாயில்லை. ஆனால் அரசு ஒரு பெரிய மாற்றத்தை கல்வித் துறையில் கொண்டு வந்தது. அதிபர்கள் 55 வயதுடன் ஓய்வு பெற வேண்டும் என்ற தீர்மானம் எம் எல்லோரையும் நிலைகுலைய வைத்தது. அதன் படிக்கு எமது அதிபர் 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெற வேண்டும். பாடசாலையின் தலைவிதி?

1957ல் நான் மகாஜனாவில் ஆசிரியப் பணி ஏற்ற பொழுது பாடசாலை முதல் தர (Grade 1) பாடசாலையாகவே இருந்தது. அப்பொழுது உயர்தர வகுப்பிலே உயிரியல் பிரிவினிலே இரண்டு வகுப்புகள் மாத்திரமே இருந்தன. முதல் ஆண்டு வகுப்பு ஒன்று, இன்னொன்று இரண்டாம் ஆண்டு வகுப்பு. மகாஜனாவின் பரீட்சைப் பெறுபேறுகளின் காரணமாக அதன் பிரபலம் மலையக, கீழ் மாகாண மாணவர்களையும் கல்வி கற்பதற்காகக் காந்தம் போல் இட்டு வர உயர்தர வகுப்புக்களின் மாணவர் தொகை அபரிமிதமாக அதிகரித்து விட்டது. 1971ம் ஆண்டினிலே உயர்தர வகுப்புகளிலே உயிரியல் பிரிவில் மாத்திரமே 8 வகுப்புகள் இருந்தன. ஒவ்வொரு தரத்திலும் இரண்டு வகுப்புக்கள். பாடசாலையும் அதியுயர் தரத்தினுக்கு (Super Grade) அரசினால் உயர்த்தப்பட்டிருந்தது. மகாஜனா தவிர யாழ் இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் ஹார்ட்லிக் கல்லூரி ஆகியவையும் உயர்தர கல்லூரிகளாக காலத்துக்குக் காலம் அரசு தரம் உயர்த்தியிருந்தது. இப் பாடசாலை அதிபர்களுக்கென விசேட சம்பள விகிதமும் இருந்தது.

1965ல் ஆட்சி மாறிய பொழுது ஏற்பட்ட கல்விச் சீரமைப்பினால் கல்வி அமைச்சில் ஒருமித்த சேவைகள் என்ற இலங்கை கல்விச் சேவை (C.E.S) எனும் அமைப்பினை உருவாக்கி பாடசாலை நிர்வாகம் (School Administration), மேற்பார்வை (Schools Supervision) பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம் (Educational Publications Department) என எல்லாவற்றையும் ஒருங்கிணைத்தது. இதன்படிக்கு உயர்தர கல்வி அதிபர்கள் கல்விப் பணிப்பாளர் அந்தஸ்தில் வைக்கப்பட்டனர். இதனால் முதல் முதலில் அனுகூலம் பெற்றவர்கள் இருவர். ஒருவர் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராயிருந்த திரு. இ. சபாலிங்கம், மற்றவர் கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரியில் அதிபராக இருந்த திரு. E.K. சண்முகநாதன். திரு சண்முகநாதன் யாழ் மத்திய கல்லூரிக்கும், திரு. சபாலிங்கம் யாழ் இந்துக் கல்லூரிக்கும் அதிபர்களாகப் பொறுப்பேற்றனர். இந்த ஒருங்கிணைப்பின் காரணமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பத்திராதிபர் (Editor) பதவியில் இருந்த சின்னையா சிவநேசன் அதிபராக முதலில் சிதம்பராக் கல்லூரிக்கும் அதனைத் தொடர்ந்து கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரிக்கும் கடமையாற்றிட இடமாற்றம் செய்யப்பட்டார். பத்திராதிபர் பதவி அதிபர் தரம் ஒன்றினுக்குச் சமனான பதவியாகக் கருதப்பட்டமையால் அப்பதவியில் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களில் வயதில் குறைந்தவராக திரு சின்னையா சிவநேசனே இருந்தார். திரு. சபாலிங்கம் மற்றும் திரு. சண்முகநாதனுக்குப் பிறகு நான் ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறும் வரை (1981) இன்னொருவருக்கு இத்தகைய பதவி கிட்டவில்லை. ஆனால் நாலந்தா, ஆனந்தாக் கல்லூரிகளின் அதிபர்களுக்குத் தாராளமாகக் கிட்டியது. திரு சின்னையா சிவநேசனும் நானும் நைஜீரியா செல்ல, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்த போராயிரவரும், வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபராக விளங்கிய திரு நடராசாவும் ஓய்வு பெற்ற பின்னர் முதலாந்தர அதிபர்களிலே சிரேஷ்ட அதிபர்களாக இருந்த யாழ் இந்துக் கல்லூரியின் பி.சி. குமாரசாமிக்கோ, பெண்கள் இந்துக் கல்லூரி அதிபர் செல்வி இராமநாதனுக்கோ அல்லது விக்ரோறியா கல்லூரி அதிபராக இருந்த திரு அருணாசலத்துக்கோ இப் பதவி உயர்வு கிட்டியதாகத் தெரியவில்லை.

(26ம் பக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழ் வானொலி

## நட்சத்திரத் திருவிழா














ஒளிப்படங்கள்: கோகுலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் தகவல்' - பத்தாவது ஆண்டு கனடிய தின விழா








கனடிய தின விழா ஒளிப்படங்கள்: கே. கமலலிங்கம்

முன்னட்டையையும், 17ம், 20ம், 31ம் பக்கங்களையும் பார்க்க.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் தகவல்' - கனடாவின் 140வது பிறந்தநாள் விழா





## முன்னட்டையில் கனடிய தின மதிப்பளிப்புகள்





கனடா 'தமிழர் தகவல்' வெளியீட்டகம் பத்தாவது ஆண்டாக நடத்திய கனடிய தின விழா கடந்த மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் கனடா கந்தசாமி கோவில் அலங்கார மண்டபத்தில் நடைபெற்றது. கனடாவின் 14வது பிறந்த நாள் என்னும் வகையில் இவ்விழா சிறப்பான நிகழ்ச்சிகளுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

செல்வி அனோஜினி குமாரதாசனின் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் ஆகியவற்றையடுத்து அமைதி வணக்கம் இடம்பெற்றது. கவிஞர் வி. கந்தவனம் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தியதையடுத்து, தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியை நாட்டியக் கலைமணி சசிகலா பிரபாகரனின் வெலஸ்லி வளாக மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வசந்தம் உளவளத் துணை நிலைய முதியவர்கள் வழங்கிய 'சம்போ மகாதேவா' குழு

(31ம் பக்கம் வருக)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் தகவல்' - கனடிய தின விழா - பரிசும் மதிப்பும்







## அரங்கனின் குரலிசை அரங்கேற்றம்





கடந்த இரு சகாப்பங்களாக மிஸ்ஸிஸ்ஸாகாவில் இயங்கிவரும் 'சதாகான நிலையம்' இசைக் கல்லூரி ஆசிரியர் பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் மாணவன் அரங்கன் லிங்கத்தின் குரலிசை அரங்கேற்றம் கடந்த மாதம் 07ஆம் திகதி யோர்க் பல்கலைக்கழக கலையரங்கில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒன்ராறியோ மாகாண பொலிஸ் திணைக்களத்துக்கு மாகாண முதலமைச்சர் டால்ரன் மக்கன்ரி 26 மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளார். புதிதாக இருநூறு மாகாணப் பொலிஸாரை நியமனம் செய்யவும், அவர்களுக்கான பயிற்சியைத் துரிதமாக வழங்கவும் இப்பணம் பயன்படுத்தப்படும்.

ரொறன்ரோவின் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ், நகரசபை எல்லைக்குள் ஒரு மில்லியன் டாலர்கள் பெறுமதியான மரங்களை நடுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இந்தத் திட்டம் 2010ம் ஆண்டில் பூரணமடையும்போது, நகரிலுள்ள மரங்களின் எண்ணிக்கை தற்போதுள்ளதைவிட இரண்டு மடங்காக அதிகரிக்கும். இதன் அடிப்படையில் இங்குள்ள பூங்காக்களில் 2,500 மரங்கள் நடப்படவுள்ளன.

கனடிய மத்திய அரசின் பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் விபரங்களையும் இப்போது இலகுவாக இணையத் தளத்தின் ஊடாக இப்போது பார்க்க முடியும். www.servicecanada.gc.ca என்பது இதன் முகவரி. வேலைக்காலக் காப்புறுதிக்கு விண்ணப்பம் செய்வது உட்பட்ட பல்வேறு விண்ணப்பத் தொடர்புகளும் இதன் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது நண்பனைக் கடித்துக் காயப்படுத்திய தனது நாய், நண்பனைத் தொடர்ந்து கடித்து மரணத்தை விளைவிப்பதிலிருந்து காப்பாற்ற அந்த நாயைச் சுட்டுக் கொலை செய்தார் அதன் சொந்தக்காரர். இந்தச் சம்பவம் ஒட்டாவாவில் கடந்த மாதம் 11ம் திகதி நடைபெற்றது. கொல்லப்பட்ட நாய் Rottweller இனத்தைச் சேர்ந்த 125 றாத்தல் எடையுடையது.

ஒன்ராறியோவில் ஆறு குழந்தைக்கு ஒரு குழந்தை என்ற விதத்தில் வறுமைக் கோட்டின் கீழே வாழுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு மூன்று லட்சத்து மூவாயிரம் பேர் உணவு வங்கியிலேயே தங்கி வாழுகின்றனர். (அனேகமாக இந்தக் குடும்பங்களின் வருட வருமானம் பத்தாயிரம் டாலர்களுக்கும் குறைவு).இவர்களுள் 40 வீதமானோர் குழந்தைகள். நம்ப முடிகின்றதா?

மிசிசாகா, பிராம்டன் நகரங்களை உள்ளடக்கிய பீல் பிரதேச பொலிசார் அங்கு இடம்பெற்ற பாரிய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்ராறியோ அரசு வழங்கிய பத்து லட்சம் ருபா முதலீட்டில் பல துரித நடவடிக்கைகளை எடுத்த பீல் பொலிசார் பெருமளவிலான துப்பாக்கிகளையும், மதுபோதைப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கனடாவில் சிறுவர்கள் பருமனாக வருவது அதிகரித்து வருவதாக ஆய்வு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. உடற்பயிற்சிக் குறைவும், கூடிய நேரத்தை தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன்னால் செலவிடுவதுமே இதற்கான முக்கிய காரணிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், கனடாவில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் நிறை குறைவாகப் பிறப்பதாக மற்றொரு அறிக்கை தெரிவிக்கின்றது.

ரொறன்ரோ நகர எல்லைக்குள் சொத்து விற்பனை வரியையும், வாகன அனுமதி வரியையும் அதிகரிப்பதற்கு ரொறன்ரோ நகர முதல்வர் டேவிட் மில்லர் எடுத்த முயற்றி ஒரு வாக்கினால் தோல்வியைக் கண்டுள்ளது. ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் அக்டோபர் பத்தாம் திகதி நடைபெறுவதால், வரி அதிகரிப்புகளை அதுவரை ஒத்திவைப்பதென்று பல அங்கத்தவர்களும் கருத்து வெளியிட்டனர். வாக்கெடுப்பில் 22-23 வாக்குகள் அளிக்கப்பட்டதால் ஒரு வாக்கினால் நகர முதல்வரின் தீர்மானம் தோல்வியைக் கண்டது.

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பியுரெக் கல்லூரி பட்டமளிப்பு - 2007




கொம்பியுரெக் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு வைபவம் ஸ்காபரோ டெல்டா ஹோட்டலில் கல்லூரி இயக்குனர் கலாநிதி த. வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. ஒன்ராறியோ மாகாண அமைச்சர்கள் ஜெரி பிலிப்ஸ், மைக்கல் சான் ஆகியோர் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினர். சிறப்பு அதிதிகளாக கலாநிதி வே. இலகுப்பிள்ளை, பேராசிரியர் லின் கெடிஸ், ஸ்காபரோ Accerditation Program முகாமையாளர் சாரா ட்ரகொவிக் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்புரை வழங்கினர். கொம்பியுரெக் கல்லூரி வளாகங்கள் ஸ்காபரோ-கென்னடி மற்றும் கென்னடி-செப்பர்ட் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.









யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

The Law Offices of
**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

Tel: 416 265 3456 Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்* 14
எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

ஒவ்வொரு தடவையும் உங்களைச் சந்திக்கும் போது மிகுந்த குதூகலம் பிறக்கும். மாமா பெரியவர்களை விட்டு விட்டு உங்களுடனேயே உரையாட விரும்புவார். கள்ளம் கபடமற்ற, தயக்கமில்லாமல் பதில் கூறுகின்ற, விசித்திரமான பதிலை சொல்லுகின்ற, மாமாவையே திணறடிக்க வைக்கின்றக் கேள்விகளை கேட்கின்ற உங்களைப் பார்ப்பதில் உரையாடுவதில் மாமாவுக்கு தனி விருப்பம் உண்டு.

மாமாவின் பக்கத்தில் சிட்டுக்கள் ஒட்டிக் கொள்வதனைப் பார்த்து எப்படி உங்களுடன் சேர்ந்து கொள்கின்றார்கள்? என்று பலர் கேட்பதுண்டு. மாமாவும் சிரித்துக் கொண்டே 'ஒரு மகிழ்ச்சியான சிட்டுவாக மாறி விடுவது தான் காரணம்' என்று கூறுவார்.

சிட்டுக்களே! உங்களைப் பார்த்து பெரியவர்கள் பல கேள்விகளைக் கேட்பார்கள். நீங்கள் சிலவேளைகளில் பதில் கூறாமல் ஓடி ஒளிந்து விடுவீர்கள். மாமா முதலில் கேட்பது உங்களுடைய 'நண்பர்' பற்றியது தான். முதலில் உங்கள் நடவடிக்கை களை சற்று நேரம் அவதானித்த பின்பு மாமா கேட்கும் கேள்வி இதுதான். "உங்களுக்கு எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்" என்பது தான். உங்களை கவருவதற்கு வழி இதுதான்.

நீங்கள் கிட்ட வருவீர்கள். மிகுந்த ஆவலுடன் விரல்களை மடித்துக் கொண்டே ஒன்று இரண்டு... என எண்ண தொடங்குவீர்கள். சிலர் இரண்டு மூன்றுடன் நிறுத்தி விடுவீர்கள். சிலர் தொடர்ந்து எண்ணுவீர்கள். இதனைப் பார்த்துவிட்டு மாமா கேட்பார் அப்படியென்றால் 'உங்களுடைய நல்ல நண்பர் யார்? என்பது தான். அப்போது நீங்கள் நன்றாக யோசித்துவிட்டு ஒரு பெயரை கூறுவீர்கள்.

சிட்டுக்களே! உங்களுக்கு இந்த 'நட்பு' பற்றிய எண்ணம் என்பது எப்படியாக ஏற்படுகிறது என்பது மிகவும் இரசனைக்குரியது. நீங்கள் சிறிய வகுப்புகளில் எல்லோருடனும் நட்பாக (Friendly) பழகுவீர்கள். பின்பு பல நண்பர்களை (Friends) பெறுகிறீர்கள். பின்பு உங்கள் சிறந்த நண்பரை (Best friend) பெறுகின்றீர்கள். இவ்வாறு நீங்கள் தெரிவதற்கு பல காரணங்கள் உள்ளன.

உங்களது உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுகின்ற, உங்களது இரசனைகளை தாங்களும் இரசிக்கின்ற, உங்களது எண்ணத்துடன் ஒத்துப் போகின்ற, உங்களது இரகசியங்களை விரும்பிக் கேட்கின்ற உங்களது படிப்பில் ஒத்துழைக்கின்ற பல காரணங்களால் சிறந்த நண்பர்கள் கிடைத்து விடுகின்றார். உங்களது சிறந்த நண்பரின் பெயரை கூறுமட்டும் மாமா விடமாட்டார். கேள்விகள் பலவற்றை கேட்பார். இறுதியில் உங்களது நண்பரின் பெயரை கூறுவதில் மகிழ்ந்து போகின்றீர்கள்.

அன்பான சிட்டுக்களே! நல்ல நண்பரை தெரிவதில் உங்களுக்குள் உணர்வுகள் எப்படியெல்லாமோ செயல்படுகின்றன. உங்களை அறியாமலே அவை தொழிற்படுகின்றன. பல தேர்வுகளுக்கு பின்பு முடிவு செய்கின்றீர்கள். வாழ்நாள் முழுவதற்கும் இந்த தெரிவு முக்கியமாகிறது. "உங்களைப் பற்றி கூற வேண்டுமா அப்படியானால் உங்கள் நண்பரைக் கூறுங்கள்" என்ற பழமொழியில் எவ்வளவு அர்த்தமுண்டு!

மாமாவின் ஆசையும் கூட உங்களது நட்பு பற்றியதுதான். நல்ல நண்பரை தெரிவு செய்யுங்கள். முடிந்தவரை நட்பினை காப்பாற்றுங்கள். இறுதிவரை கூட வருவது இதுதான்.
மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

### RAINBOW VILLAGE DENTAL OFFICE

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

### Main Square Dental Office

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



### EARLY CHILDCARE ASST. (ECA)

100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**

- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

### COMPUTERIZED ACCOUNTING

**JOB OPPORTUNITIES**

- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

### PERSONAL SUPPORT WORKER (PSW)

100% Guarantied Co-op placement

**JOB OPPORTUNITIES**

- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

### MEDICAL OFFICE ADMIN (MOA)

**JOB OPPORTUNITIES**

- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

### BUSINESS ADMINISTRATION

**JOB OPPORTUNITIES**

- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

### NETWORK ENGINEERING

**JOB OPPORTUNITIES**

- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

## Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Kennedy / Eglinton
N/W Corner, Above Liberary
Tel : 426.285.9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

12

# வெள்ளிப் பணம் - டாலர்

கனடாவில் கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் இம்முறை Canada Learning Bond என்று அழைக்கப்படும் மானியக் கொடுப்பனவு பற்றி சற்று விரிவாக பார்ப்போம். இதனை பிரயோகிப்பதில் உள்ள சிக்கல் காரணமாக நாமும் இதனை CLB என குறிப்பிட்டு தொடர்கின்றேன்.

பொதுவாக CLB திட்டத்தின்படி 2003ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிக்கு பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு இந்த மானியம் கிடைக்கும். இதன்படி பெற்றோர்கள் பிள்ளையின் பெயரால் ஒரு கல்விச் சேமிப்புத் திட்ட (Registered Education Savings Plan) கணக்கினை ஆரம்பித்தல் முக்கியமான ஒன்றாக அமைகின்றது.

அவ்வாறு பெற்றோர்கள் கணக்கினை ஆரம்பித்ததன் பின்னர் முதல் வருடம் அரசாங்கம் $500 இனை பிள்ளையின் பெயரில் கணக்கில் வைப்பில் இடும். தொடர்ந்து வரும் வருடங்களில் வருடாவருடம் $100 டாலர்கள் வீதம் 15 வயது வரைக்கும் வைப்பில் இடும். எனவே மொத்தமாக $2000 டாலர்கள் ஒரு பிள்ளைக்கு CLB மூலம் கிடைக்கும் சாத்தியம் உண்டு.

இந்த CLB மானியத்தினை பெறுவதற்கு பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.


* CLB இனை பெறும் குழந்தை 2003ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிக்கு பின்னர் பிறந்ததாக இருக்க வேண்டும்.
* பெற்றோர்கள் மத்திய அரசால் கொடுக்கப்படும் Canada Child Tax Benefit மற்றும் National Child Benefit Supplement என்பனவற்றை பெறுபவர்களாக இருக்க வேண்டும். இந்த National Child Benefit Supplement பெறுபவர்களின் குடும்ப வருட வருமானம் $36,378க்கு உட்பட்டு இருத்தல் முக்கியமானது.
* Social Insurance Card பிள்ளை வைத்திருத்தல் வேண்டும்.

பொதுவாக இந்த CLB மானியத்தினை பிள்ளையின் 18 வயதுக்குள் எப்பவும் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகின்ற போதும், அதனை விரைவாக பெறுவதற்குரிய வழிமுறைகளை மேற்கொள்வதுதான் நன்மை பயக்கும் என நிதி ஆலோசகர்கள் கூறுகின்றனர்.

இதனை பெறுவதற்கான வழிமுறைகள் எவை எனப் பார்க்கும் பொழுது இளம் பெற்றோர்கள் உங்களுக்கு குழந்தை கிடைத்தவுடன் எவ்வளவு விரைவாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற முடியுமோ அதனை முதலில் பெறுதல் அவசியம். அதன் பின்னர் SIN Card என அழைக்கப்படும் Social Insurance Card க்கு விண்ணப்பித்தல் வேண்டும். அதனையும் பெற்ற பின்னர் நீங்கள் RESP கணக்கினை ஆரம்பிக்கலாம்.

கனடா அரசு கல்வி என்னும் நீண்ட கால முதலீட்டில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில் இப்படியான மானிய கொடுப்பனவுகளை வழங்குகின்றது. இதனை தமிழர்களாகிய நாம் சரியான முறையில் புரிந்து கொண்டு செயல்படுவது எமது எதிர்கால சந்ததியின் உன்னதமான வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அதுமாத்திரமல்ல தாயகத்தில் சிங்கள அரசால் பல்கலைக்கழக கல்வி எமக்கு மட்டுப்படுத்தப்பட்டதால் பலர் உயர்கல்விகளை பெற முடியாதவர்களாக இருந்தோம். ஆனால் அடைக்கலம் தந்த கனடா நாடு உயர்கல்வியை ஊக்குவிக்க எடுக்கும் முன்மாதிரியான நடவடிக்கைக்கு தமிழர்களாகிய நாம் கனடாவுக்கு என்றும் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்.

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!


சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!

416 605 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Jude**

**Anthonypillai** LL.B. (Canada)

Barrister, Solicitor & Notary Public

Former Asst. Crown Attorney

**Phone**

**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**

கனடிய வழக்கறிஞர்

முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**

**416 332 8547**

**தொலைநகல்**

**416 332 8379**

2390 Eglinton Ave. East

Suite 259

Scarborough ON

M1K 2P5


**பிரிய மனமின்றி..**

மகாஜனாவில் உயர்தர வகுப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க புதிய ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தாவரவியல் கற்பிப்பதற்காக இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் விசேட பாடநெறியில் சித்தி பெற்ற செல்வி யோகேஸ்வரி கனகசபையினை (திருமதி பாலசுப்பிரமணியம்) நியமித்தார் அதிபர். சிறிய உருவம் எவரையுமே கடிந்து பேசும் தன்மை இல்லை ஆனால் மாணவர்கள் யாபேரும் அவரிடம் பயம் கலந்த மரியாதை வைத்திருந்தனர். கடந்த மாதம் (14-07-2007) திருமதி திவ்வியராஜனின் நாட்டியப் பாடசாலையான கவின் கலாலயாவின் ஆண்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவினில் பால்ரிமோர் நகரில் உள்ள வைத்தியத் தம்பதிகள் திரு. திருமதி அம்பலவாணர் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றினார்கள். வைத்திய கலாநிதி அம்பலவாணர் மகாஜனாவில் எனது மாணவர். பல வருடங்களின் பின்னர் என்னைச் சந்தித்தார். தன்னைக் கற்பித்த ஆசிரியர்கள் பற்றிச் சொல்கின்ற பொழுது அவர் செல்வி கனகசபையைப் பற்றி எத்தனை பவ்வியத்துடன் பேசினார் என்பதைக் கண்ட பொழுது ஆசிரியர்களை மாணவர்கள் எவ்வளவு துல்லியமாகக் கணிக்கிறார்கள், தங்கள் இதயத்தில் அவர்களின் நினைவுகளை எவ்வளவு புனிதமாக வைத்துப் பேணுகிறார்கள் என்பதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தேன்.

1965ம் ஆண்டினிலே செல்வி மனோ சபாரத்தினம் விலங்கியல் பாடம் போதிப்பதற்காக நியமிக்கப்பட்டார். இவரும் இலங்கைப் பல்லைக்கழகத்தின் விலங்கியல் பாடநெறியில் விசேட தகைமை பெற்றவர் சிறந்த ஆசிரியர். அதோடு மாத்திரமல்லாது பாடசாலையின் புற நிகழ்ச்சிகளிலும் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டார். மிகவும் கண்டிப்பானவர். கடமை உணர்வு மிக்கவர். யாழ் நகரில் வசித்தவர். தினசரி வாடகைக் கார் மூலம் பாடசாலை வருவார். யாழ்ப்பாணத்தில் இருந்தும் எமது கல்லூரியில் கல்வி கற்க மாணவிகள் வந்தமையாலே அவர்கள் எல்லோரும் ஒரே காரில் வந்து இறங்குவார்கள்.

6 பிரிவுகளில் மூன்று பிரிவுகளுக்கு நானும் மற்றைய மூன்றினுக்கு அவரும் விலங்கியல் போதித்தோம். எமக்குள்ளே ஒரு நட்புரிமையான போட்டி இருக்கவே செய்தது. அவர் இலங்கைப் பல்கலைக்கழக பட்டதாரியானமையாலே பேராதனையிலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர்களாயிருந்த பேராசிரியர்கள் பலர் எமது பாடசாலையின் உயர்தர மாணவ மன்றத்தின் வருடாந்த இராப்போசன விருந்துகளில் பிரதம அதிதிகளாக வருகின்ற வாய்ப்புக் கிடைத்தது. எமது துரதிர்ஷ்டமோ செல்வி மனோ சபாரத்தினத்தின் பேரதிருஷ்டமோ அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராக நியமனம் பெற எம்மைவிட்டு நீங்க வேண்டி நிலை ஏற்பட்டது. பின்னர் அங்கே அவர் பேராசிரியராக உயர்ந்து இறுதியில் மட்டக்களப்பு வளாகத்தில் தற்காலிக துணைவேந்தராகக் கடமையாற்றியும் உள்ளார். செல்வி. மனோ சபாரத்தினத்தினம் பாடசாலையை விட்டு விலகியதும் அவரது இடத்திற்கு சந்திரசேகரி இடமாற்றம் பெற்று வந்தார். இவர் எனது பால்ய நண்பன். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலேயே விலங்கியல் கற்று B.Sc பட்டம் பெற்றவர். முதல் வகுப்பில் தேறியவர். பாணந்துறை ஸ்ரீசுமங்கலா கல்லூரியில் விலங்கியல் ஆசிரியராகக் கடமையாற்றி அங்கே மிகவும் பிரபலமான ஆசிரியராகப் பேரும் புகழோடும் இருந்தவர். பயிற்றுமொழி தாய்மொழியாக மாறியதால் அங்கிருந்து நெல்லியடி மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டு அங்கே விலங்கியல் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். இவரது மனைவி எனது பழைய மாணவி. கட்டுவனைச் சேர்ந்தவர். ஆகவே சந்திரசேகரி நெல்லியடியில் இருந்து மகாஜனாவிற்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

எனது பதவி உயர்வு மாணவரிடையே ஒரு பரபரப்பினை ஏற்படுத்தியது உண்மை ஆனால் அபிமானத்துக்குரிய ஆசிரியர் ஒருவர் பதவி உயர்வு பெறுவது அவர்கள் எல்லோரையும் மகிழ்வெய்த வைத்தது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக அப்போது கடமையாற்றியவர் திரு. தணிகாசலம் அவர்கள். கல்வி அதிகாரியாக தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் எனது மாணவியாகிய வைத்திய கலாநிதி திருமதி நற்குணராசாவின் தந்தையார். மகள் பாடசாலையில் கற்கின்ற பொழுது எனது சனிக்கிழமை மற்றும் விடுமுறை வகுப்புகளுக்கு அவரே அழைத்து வருவதால் என்னோடு பரிச்சயம். அத்துடன் ஓரளவிற்கு எனது தாயார் மூலம் கொஞ்சம் தூரத்து உறவும் கூட. எனக்கு வசதியாக ஏழாலை மகாவித்தியாலத்திற்கு அதிபராக நியமனக் கடிதத்தைத் தந்தார். இப் பாடசாலையில் தான் சண்டிலிப்பாய் ஆங்கிலப் பாடசாலையில் எனக்கு முதல் அதிபராக இருந்த தில்லையம்பலம் அதிபராகக் கடமையாற்றினார். அதன் பின்னர் நெடுந்தீவு மக்களால் இன்றும் போற்றப்படும் திரு நவரத்தினசிங்கமும் எனது ஊரவரான தில்லையம்பலமும் அதிபர்களாக இருந்துள்ளார்கள். ஆகவே அப்பாடசாலை பற்றி நான் ஓரளவுக்குத் தெரிந்து வைத்திருந்தேன். அதோடு எனது காங்கேசந்துறை வீட்டில் இருந்து மூன்று நான்கு மைல் தூரத்திலேயே இருந்தமையால் துவிச்சக்கர வண்டி மூலமாகவே போய்வரலாம். எனவே, அப்பாடசாலையை விரும்பி ஏற்றேன். 1971ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி அப்பாடசாலைக்கு அதிபராகச் சென்றேன். பாடசாலையை விட்டு நீங்கிச் செல்வதற்கு முன்னர் அதிபர் ஜெயரத்தினத்திடம் அவ்வருடம் குறைந்தது 15 மாணவர்கள் மருத்துவம், உயிரியல் விஞ்ஞானம் கற்பதற்குத் தேர்வு பெறுவார்கள் என உறுதி அளித்தேன். பின்னர் எனது ஆரூடம் சரிவந்ததைக் கண்டு சந்தோசப்பட்டோம். நான் மகாஜனாவை விட்டு விலகிச் சென்றிருந்தாலும் வைரவிழாச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றினேன். ஜூன் மாதம் 24ம் திகதி தொடக்கம் ஒரு வாரம் வைரவிழா பொருட்காட்சியும் களியாட்ட விழாவும் நடத்தினோம். (28ம் பக்ம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 3

## ஒழுக்கம் ஒன்றே விழுப்பம் தரும்

முன்னர் பூவின் உருவத்தையும் பருவத்தையும் குறிக்கும் தமிழ்ச் சொற்களைப் பார்த்தோம்.

இப்போது இலையின் உருவத்தையும் பருவத்தையும் குறிக்கும் சொற்களைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| கொழுந்து | குழந்தைப் பருவம் |
| தளிர் | இளமைப் பருவம் |
| இலை | காதற் பருவம் |
| பழுப்பு | முதுமைப் பருவம் |
| சருகு | இறுதிப் பருவம் |

ஆங்கிலத்தில் இலையைக் குறிக்க ஒரேயொரு சொல்தான் இருக்கிறது. Leaf என்பதே அச்சொல்லாகும். வடமொழியில் இலையைப் பத்திரம் என அழைப்பர். ஆங்கிலம் சரி வடமொழி சரி இலையின் பருவத்தைக் குறிக்கத் தனிச் சொற்கள் இல்லை.

ஆங்கிலத்தில் பருவத்தைக் குறிக்க உரிச்சொல்லை (adjective) எழுவாய்க்கு (subject) முன் ஒட்ட வேண்டும். எடுத்துக்காட்டு தளிரைக் குறிக்க tender leaf எனச் சொல்ல வேண்டும். சருகைக் குறிக்க dead leaf என்று சொல்ல வேண்டும். தமிழில் இந்தச் சிக்கல் இல்லை.

இலை என்ற சொல் சில மரங்களுக்கு மட்டுமே பொருந்தும். எடுத்துக்காட்டு மா, பலா, வாழை, அரசு, ஆல், அத்தி, நாவல், பூவரசு ஆகியன.

பசளி, பொன்னாங்காணி, அகத்தி இலைகள் கீரை எனப் பெயர் பெறும்.

நிலத்திலே படர்கின்ற கொடிகளது இலைகள் பூண்டு என அழைக்கப்படும்.

தென்னை மரம், பனை மரம், கமுகு மரம் இவற்றின் இலை ஓலை எனப்பெயர் பெறும். பனை, தென்னை மரங்களின் இளமைப் பருவத்தைக் குருத்து என அழைப்பர். பனை ஓலையின் முதுமைப் பருவத்தைக் குறிக்க காவோலை என்ற சொல் பயன்படுத்தப்படும்.

'காவோலை விழக் குருத்தோலை சிரித்ததாம்' என்ற பழமொழி இதனை உறுதிப்படுத்தும்.

அறுகு, கோரை போன்றவற்றின் இலை புல் எனப்படும்.

நெல்லின் இலை தாள் எனப்படும். தாளில் இருந்து நெல்லைப் பிரித்தபின் அது வைக்கோல் எனப்படும்.

தாழையின் இலை மடல் என அழைக்கப்படும். அவ்வையார் பாடிய மூதுரையில் வரும் பாடல் ஒன்றில் அச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

மடல் பெரிது தாழை, மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது, அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும். (மூதுரை 12)

மடல் - இதழ்
தாழை - தாழம்பூவின்
மகிழ் - மகிழம்பூ (அவ்வளவு பெரிதாக இல்லாவிட்டாலும்)
கந்தம் - நறுமணத்தில்
இனிது - தாழம்பூவைவிட இனியது
கடல்பெரிது - கடல் பெரிதாக இருக்கிறது (ஆயினும்)
மண்நீரும் ஆகாது - அழுக்குப் போக்குவதற்கும் அந்த நீர் உதவாது (ஆனால்)
அதன் அருகே - கடற்கரையிலே (தோன்றும்)
சிற்றூறல் - சிறிய நீர்க்குமிழி ஊற்று
உண் நீரும் - குடிக்கத்தக்க தூய்மையான நீரும்
ஆகும் - ஆகும் (ஆகவே)
உடல் சிறியவர் என்று - பார்வைக்குச் சிறியவராகத் தோன்றுவது உண்டு
இருக்க வேண்டா - மதியாமல் இருக்க வேண்டாம்.

தாழம் பூ இருக்கிறதே, அது பார்ப்பதற்குப் பெரிதாக இருக்கிறது. மிகப் பெரிய மடல்கள்.

மகிழம்பூவோ பார்வைக்குச் சிறியதாயிருக்கும்.
மணம் எதற்கு அதிகம்? தாழம்பூவுக்கா? மகிழம் பூவுக்கா?
இதில் என்ன அய்யம்? மகிழம்பூவுக்குத்தான்.

கடல் இருக்கிறது. அது மிகப் பெரியது. இருந்தும் என்ன பயன்? அந்த நீர் எதற்குப் பயன்படும்? ஒன்றுக்கும் உதவாது. ஆனால் கடற்கரை அருகே உள்ள சிறிய ஊற்று நீர் எப்படி இருக்கும்? குடிப்பதற்கு உவப்பாக இருக்கும்.

பெரியவர் என்றோ, சிறியவர் என்றோ உருவத்தினால் மதிப்பிடக் கூடாது. உருவத்தினால் பெரியவருள் பலர் சிறுமைக் குணத்தினராயிருப்பர். உருவத்தினால் சிறியவர் பலர் நல்ல குணமுடையோராக இருப்பர்.

உருவு கண்டு எள்ளாமை வேண்டும், உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (குறள் 667)
என்ற திருக்குறளின் கருத்தைத்தான் அவ்வையார் (மூதுரை அவ்வையார் வேறு, சங்ககால அவ்வையார் வேறு) எளிய இனிய செந்தமிழில் பாடியிருக்கிறார்.

இன்னும் ஒரு புலவரும் இதே கருத்தைச் சொல்லியிருக்கிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒரேயொரு சங்கப்பாடலைப் பாடிப் புகழ்பெற்ற கணியன் பூங்குன்றனார்.

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'
என அறிவுறுத்துகின்றார்.

வாழ்க்கையின் உறுதிப் பொருள்கள் மூன்று என மொழிபர் தமிழ் ஆன்றோர். அறம், பொருள், இன்பம் என்பதே அந்த மூன்று உறுதிப் பொருள்கள்.


நான்காவதாக வீடு 'காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா!' என்றும் 'வாழ்வே மாயம்' என்றும் வெட்டி வேதாந்தம் பேசிய சோம்பேறிக் கூட்டத்தால் தமிழருடைய பண்பாட்டில் புகுந்து கொண்ட நச்சுக் கோட்பாடு ஆகும்.

வாழ்க்கையின் வெற்றிக்கு கல்வியா? செல்வமா? வீரமா? என்பது பட்டிமன்றங்களில் அதிகமாகப் பேசப்படும் பொருள். ஆனால் ஒருவனுக்கு கல்வி, செல்வம், வீரம் எல்லாம் இருந்தும் ஒழுக்கம் இல்லாவிட்டால் அவன் வாழ்க்கை விழுப்பம் பெறாது. ஒழுக்கம் ஒன்றே விழுப்பம் தருவதால் அது உயிரினும் ஓம்பப்படும் என்கிறார் வள்ளுவர்.

தமிழில் நீதி நூல்கள் அநேகம் இருக்கின்றன. நீதி என்றால் ஒழுக்கம் என்று பொருள். திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் ஒரு தலையாய ஒழுக்க நூல். அதில் ஒழுக்கத்துக்கு முதன்மை இடம் கொடுத்திருக்கிறார். அறத்துப் பால் இல்லறவியலில் ஒழுக்கம் உடைமை பற்றி நேரடியாகக் கூறுகிறார். பின்னர் துறவறவியலில் கூடா ஒழுக்கம் பற்றிக் கூறுகிறார். துறவிகளுக்குச் சொல்லப்பட்ட அறிவுரை இல்லறத்தாருக்கும் பொருந்தும்.

(மறுபக்கம் வருக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### என்றுமுள்ள செந்தமிழ்..

அன்புடைமை, விருந்து ஓம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிவதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, பிறன் இல்விழையாமை, பொறை உடைமை, அழுக்காறாமை, வெங்காமை, புறங்கூறாமை, தீவினை அச்சம், அருள் உடைமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, அவா அறுத்தல், குற்றம் கடிதல் போன்றவை ஒழுக்கம் பற்றிய வள்ளுவரின் அறிவுரைகளே.

Art of Living (வாழும் கலை) பற்றி இப்போது தான் மற்றவர்கள் பேசத் தொடங்கியுள்ளார்கள். தமிழர்களைப் பொறுத்தளவில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர் செந்தமிழில் அதனை வரைந்து வைத்து விட்டார்கள்.

தமிழர்களைப் பொறுத்தளவில் சில்லை மீண்டும் கண்டு பிடிக்க வேண்டிய தேவை இல்லை!

தமிழில் சொல் வளத்துக்கு அளவில்லை. ஆனால் இடைக்காலத்தில் கலைச் சொல்லாக்கம் தேங்கிப் போய்விட்டது. இப்போது மீண்டும் அதற்கான எத்தனம் உலகளாவிய அளவில் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆங்கிலத்தில் அரிசியைக் குறிக்க rice என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். சோற்றைக் குறிக்கவும் அதே சொல்தான் பயன்படுகிறது. இதனால் சோறு கேட்பவர்களுக்கு அரிசியும் அரிசி கேட்பவர்களுக்கு சோறும் கிடைத்து விடலாம் என முத்தமிழ் அறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார்.

இப்படிச் சொல்வதால் ஆங்கில மொழியைக் குறைத்து நான் மதிப்பிடுவதாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆங்கிலேயர் உலகைக் கட்டி ஆண்டதால் அந்த மொழி வணிகம், அறிவியல், அரசியல், வானியல், மருத்துவம் எனப் பல்துறைகளிலும் அசுர வளர்ச்சி கண்டுள்ளது. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் ஆங்கிலம் அரச மொழியாகவும் கற்கை மொழியாகவும் விளங்குகிறது. ஐரோப்பா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகளில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகப் பயிலப்படுகிறது. இந்தியாவில் உயர் கல்வி மொழியாகவும் விளங்குகிறது. (வளரும்)

---

### பிரிய மனமின்றி..

நான் தினசரி அங்கு சென்று என்னாலான உதவியைச் செய்து வந்தேன். அதிபர் கவலை எப்பொழுதும் தான் ஓய்வு பெற்ற பின்னர் பாடசாலையின் கதி என்னவாகும் என்பது பற்றியதாகவே இருந்தது. நான் பலமுறை இப்பாடசாலை ஒரு உயரிய நோக்கத்தோடு உங்கள் தந்தையாரால் உருவாக்கப்பட்டது. அது என்றும் உயர உயரப் போகுமே அன்றி என்றும் விழமாட்டாது என உறுதி கூறுவேன். மகாஜனாக் கல்லூரியை எமது ஸ்தாபகர் துரையப்பாபிள்ளை 1910ம் ஆண்டிலே நிறுவாவிட்டால் தெல்லிப்பழை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள மக்களின் கல்வித் தரம் என்ன நிலையில் இருந்திருக்கும் என்பதை நினைக்கும் பொழுது ஒரு திகைப்பு ஏற்படவே செய்கிறது. யூனியன் கல்லூரி அன்று அமெரிக்கன் மிசன் பாடசாலையாக இருந்தது. இக் கல்லூரி ஓரளவுக்குத் தெல்லிப்பழை மற்றும் கட்டுவன் பகுதியினரின் கல்வித் தேவையை ஈடு செய்திருக்கலாம் என்றாலும் அப்பகுதியின் கணிசமான தொகை மக்கள் கிறிஸ்தவர்களாக மாறியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

அதிபர் கல்வி அமைச்சின் கட்டளைப் பிரகாரம் 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றார். 1972ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பல விசயங்கள் பேசிய பின்னர் தான் ஒரு பிரத்தியேக பாடபோதனை நிறுவனம் தொடக்கவுள்ளதாகக் கூறினார். எனக்கோ திகைப்பு, ஏக்கம், மனவருத்தம், என அத்தனை உணர்வுகளும் ஏற்பட்டன. "நீங்கள், நீங்கள்" என்றேன். எனக்குப் பேச்சு வரவில்லை. பிரத்தியேக பாடபோதனை செய்யும் நிறுவனங்களுக்கு எதிராகப் பலமுறை அதிபர் குரல் எழுப்பியுள்ளார். கண்டனம் செய்துள்ளார். அந்த அதிபரா இப்படிச் செய்வதற்கு ஆயத்தமாகிவிட்டார்? கேட்டேன்? அவர் சொன்ன பதில் என்னைக் கலங்க வைத்தது. "எனது மாத வருமானம் இப்பொழுது அரைவாசிக்குக் குறைந்து விட்டது. எனக்கு வேறு எந்த வருமானமும் இல்லை. பாடசாலையால் நான் கடனாளியாகவும் உள்ளேன். இந்தத் தொழில் தவிர எனக்கு வேறு தொழிலும் தெரியாது. என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" எனக் கேட்டார். அவருக்காக இரங்கினேன்.

அப்போ நான் தனியார் போதனைக் கூடங்களுக்குச் செல்லாதிருந்தமையால், அவர் நிறுவனத்தில் வேலையாற்றுவதற்கு மறுத்தேன். ஆனால் வேறு பலரை அங்கு கற்பிப்பதற்காகச் சிபார்சு செய்தேன். அதிபருக்கு மகாஜனாவில் ஒரு பலமிக்க தூணாக விளங்கியவரும் அதிபரை தெய்வம் என வழிபடுபவருமான தியாகராசா அவர்கள் பாடசாலையை நிர்வகிக்கும் பொறுப்பினை ஏற்று உதவினார். மகாஜனா மற்றும் யூனியன் கல்லூரி மாணவர்கள் பலருக்கு அந்த பிரத்தியேக பாட போதனை நிறுவனம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதிபரின் நிர்வாகம் என்றதே பல பெற்றோர்களுக்கு அட்சர மந்திரமாக அமைந்தது. பிறகென்ன? அங்கும் மாணவர் தொகை கட்டுக்கடங்காது போயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

### புலம்பெயர்ந்தவர்களுக்கான தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைக-ளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.

**P. Kayilasanathan**
B.A. (Cey) LLB (Cey)

**BARRISTER & SOLICITOR**



குற்றவியல் வழக்குகள்,
அகதிநிலை விசாரணைகள்,
மனிதாபிமான விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல்,
குடும்ப வழக்குகள்,
வாகன விபத்து நஷ்டஈடு கோருதல்.

**பொ. கயிலாசநாதன்**
கனடிய பரிஸ்டர்

2401 Eglinton Av. E. Suite #302
(Eglinton / Kennedy)
Scarborough ON M1R 2M5

**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA





தொடர்புகளுக்கு:

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

## கனடிய தின விழா

நடனம் சபையினரின் பலத்த வரவேற்பைப் பெற்றது. பத்துக்கும் அதிகமான முதிய பெண்கள், ஒரே வர்ணத்துடனான சேலைகளை அணிந்து, அணியணியாக நின்று இந்த நடனத்தைத் தந்தனர்.

அடுத்து மல்வேர்ன் முதுதமிழர் மன்றத்தினரின் கிழக்கிலங்கை இஸ்லாமியர்களின் பேச்சுவழக்கைத் துல்லியமாக எடுத்தியம்பும் நாட்டார் பாடல் அபிநயமும், ஆடை அலங்கார அபிநயமும் இன்னொரு வகையான சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றன. நாட்டியக் கலைமணி மாலினி பரராஜசிங்கம் தமது மாணவிகள் சுமார் இருபது பேருடன் இணைந்து வழங்கிய 'சக்தி' நடனம், எம்மிடமுள்ள சக்தியை நாம் எவ்வாறு வசப்படுத்தி, அதனை எமக்குப் பயன்படுத்த முடியுமென்பதை அற்புதமாக விளக்கியது. நவரச ஆண்மயில் வாசு சின்னராசுவின் சதங்கை நாட்டியாலய மாணவிகளின் நடனம், வினிதா நவரத்தினத்தின் தனி நடனம், கலைச்செல்வன் உலகநாதனின் விடுதலைப் பாடலுக்கான அபிநயம் ஆகியன சிறப்பாக இடம்பெற்றன.

இவ் வைபவத்தில் ஸ்காபரோ தென்மேற்கு மாகாண சபை உறுப்பினர் திரு. லோறன்சு பெரார்டினெற்றி எம். பி.பி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்புரையாற்றினார்.

விழாவின் மகுட நிகழ்ச்சியாக இரு நாடகங்கள் இடம்பெற்றன. கவிஞரும் ஒலிபரப்பாளருமான பொன்னையா விவேகானந்தனின் மாணவர்கள் வழங்கிய 'நமதாகும் நாளை' நாடகம் குறியீட்டு வகையில் அமைந்திருந்தது. அடுத்து, ஸ்காபரோ தமிழ் மகளிர் அமைப்பின் 'செம்பொறிகள்' வழங்கிய 'காலக் கருஞ்சுழிகள்' நாடகம், #ழத்தமிழரின் இன்றைய விடுதலைப் போராட்டத்தினைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது. நாடகத்தில் பங்கேற்ற இளையோரிலிருந்து பெரியோர் வரையான அனைவரும் பொறி பறக்கும் தங்கள் நடிப்பினால் அவையினரை நிமிர வைத்ததுடன், கண்ணீரையும் வழிய வைத்தனர். கனடிய தின மாணவர் விவேகப் போட்டிக்கான பரிசளிப்பு 'தமிழர் தகவல்' பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. முதற் பரிசு பெற்ற சங்கீத் குயின்ரஸ், பிரதம புரவலர் திரு. கே. சபேசன் அவர்களால் தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைவரும் விழாவில் சிறப்புச் செய்யப்பட்டனர். விழா நெறியாளராக குயின்ரஸ் துரைசிங்கம் பணியாற்றினார். புரவலர்கள் அனைவரும் மதிப்பளிக்கப்பட்டு சிறப்புச் செய்யப்பட்டனர். சிறார்களும் இளையோரும் பெற்றோரும் முதியோரும் ஒன்று சேர்ந்து சங்கமித்த மூன்று மணித்தியால தமிழ்கலை நிகழ்ச்சிகளை விடுதலை உணர்வுடன் ஒருங்கு சேர்த்து வழங்கிய தமிழர் தகவல் வெளியீட்டகம் பாராட்டுக்குரியது.

முன்னட்டையையும் 16ம், 17ம், 20ம் பக்கங்களையும் பார்க்க.




"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் M.A
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வட அமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு
வழக்கறிஞர்
இல்லை

Motor Vehicle Accident
Criminal
வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய



சட்ட
ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்
416-803-5296
WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா வெற்றிவேலுவின் Homelife Future Realty Inc. ஐந்தாவதாண்டு பூர்த்தி வைபவம்










ஸ்காபரோ மார்க்கம்/எக்லிங்டன் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள செல்வா வெற்றிவேல் அவர்களின் Homelife Future Realty Inc வீடு விற்பனை நிலையத்தின் ஐந்தாவது ஆண்டுக் கொண்டாட்டம் கடந்த மாதம் மெடிகிறாஸ் மண்டபத்தில் நடைபெற்றது. Homelife Realty Services Inc நிறுவனரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான Andrew Cimerman தமது பாரியார் சகிதம் பிரதம அதிதியாகப் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினார். மேற்படி தலைமை நிறுவன தேசிய இயக்குனர் Joseph Lo அவர்களும் பாரியாருடன் பங்குபற்றினார். கனடிய சட்டத்தரணிகள் நாதன் சிறீதரன், ஜூட் அந்தோனிப்பிள்ளை, ஹரி ஆனந்தசங்கரி, ஸ்கோஷியா வங்கி தலைமை அதிகாரி ராகவன், ஊடகவியலாளர் திரு எஸ். திருச்செல்வம் மற்றும் றோயல் வங்கி அதிகாரிகள் உட்படப் பலர் பாராட்டுரைகள் வழங்கினர்.


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புனர்வாழ்வுக் கழக குருதிக் கொடை வைபவம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயக உறவுகளுக்குக் கைகொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது கனடிய மண்ணிலும் தன்னாலியன்ற சேவைகளைச் செய்து வருகின்றமை பெரும்பாலானோர் அறிந்ததே. 2005ம் ஆண்டிலிருந்து கனடா தினத்தை முன்னிட்டு குருதிக் கொடையும் Thanksgiving day ஐ முன்னிட்டு உலர் உணவுக் கொடையும் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன.

இம்முறை ஜுன் 30ம் நாளன்று Sunnybrook மருத்துவமனையில் ஏற்பாடாகியிருந்த குருதிக் கொடையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் பங்களித்திருந்தது. முற்பதிவு செய்திருந்தோரை தொலைபேசியில் அழைத்து வருகையை உறுதிப்படுத்தினர் தொண்டர்கள். மருத்துவமனையிலும் பேரூந்திலிருந்து இறங்குவோரையும் வாகனத்தரிப்பிடத்திலிருந்து வருவோரையும் இன்முகத்துடன் எதிர்கொண்டு வரவேற்று குருதிக் கொடை நிகழும் மண்டபத்தின் வாசலுக்கு அண்மைவரை அழைத்துச் சென்று வழிகாட்டிப் பேருதவி புரிந்தனர் புனர்வாழ்வுக் கழகத்தினர். இப்படியான நிகழ்வுகளில் சிலரை உறுதியாக எதிர்பார்க்கலாம். அவர்கள் தொண்டர்களாகவும் கொடையாளிகளாகவும் இம்முறையும் தங்கள் பங்களிப்பை நல்கியதைக் காணக் கூடியதாக இருந்தது. சிலர் முதற்தடவை குருதிக் கொடை வழங்கியமைக்கான சின்னத்தை அணிந்திருந்தனர். அவர்களைக் கொடையாளிகளாக்கிய பெருமை புனர்வாழ்வுக் கழகத்திற்கே.

ஜுலை 2ம் நாளன்று Markham, Ellesmere சந்திப்பில் Centennial Recreation Centre இல் நடைபெற்ற குருதிக் கொடையிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரின் ஏற்பாட்டில் பலர் குருதியைக் கொடையாக வழங்கி முகம் தெரியாத மானிடரின் பிணி தீர்க்கும் அரும்பணியில் தங்களையும் இணைத்துக் கொண்டனர்.

குருதிக் கொடையினால் உடல் பருக்கும், நோய் வரும் என்ற கட்டுக் கதைகளை மூட்டை கட்டித் தூர எறிந்துவிட்டு உயிர்காக்கும் இந்த நற்பணியில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும். நாம் ஒரு தடவை வழங்கும் குருதி, குறைந்தது மூவருக்கேனும் பயன்படுகின்றது. 56 நாட்களின் பின் மீண்டும் நாம் குருதிக் கொடை வழங்கலாம்.


பொதுவாகத் தென்னாசியர்கள் குருதிக் கொடை மற்றும் இது தொடர்பான விடயங்களில் வழங்கும் பங்களிப்பு ஒப்பீட்டளவில் மிகக் குறைவானது என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது. உண்மையும் கூட. முதலில் தமிழர்களாவது அந்தக் குறையிலிருந்து வெளிவருவோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதலடியை எடுத்து வைத்திருக்கின்றது. தமிழ் இளையோர் அமைப்பும் பல மாணவர்களைக் குருதிக் கொடையாளிகளாக்கியிருக்கின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இளையோர் அமைப்பும் ஆண்டுக்கொரு முறை எம்மைக் கரம் பற்றிக் குருதிக் கொடை முகாம்களுக்கு அழைத்துச் செல்கின்றனர். இரு மாதங்களுக்கொருமுறை நாம் அதைத் தொடரலாமே.

Thanksgiving day ஐ முன்னிட்டு உலர் உணவு சேகரித்து Toronto Daily Bread நிறுவனத்திற்கு வழங்க இம்முறையும் ஏற்பாடுகள் நிகழ்ந்து வருகின்றன. கடந்த ஆண்டு 2500 இறாத்தல் உலர் உணவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இம்முறை இலக்கு இருமடங்காக்கப்படுகின்றது. 5000 இறாத்தல்கள். கனடா தேசம் பரப்பளவால் மட்டுமல்ல மனதாலும் பெரியது. எமக்கு அடைக்கலம் தந்த வீடு.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் புதுமைக்கவி. நாம் இங்கு ஜகத்தினை அழிக்கத் தேவையில்லை. நன்றி நவிலும் திருநாளை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுக்கும் உணவுப் பொருள் சேகரிப்பில் பங்கெடுப்போம்.

- கந்தசாமி கங்காதரன் (கங்கா)

**The Children's Education Trust of Canada**
offered to the public by
**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager
416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S.M.S.F.D.SR.C.S (Eng). General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S.M.D.F.R.C.D (C). Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO

B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org